உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை!! அச்சமென்பதில்லையே !!!

கோவைமுரசு

... கோவை முரசு, வெளியீடு: ஆசிரியை S.P. மீனாட்சி அம்மாள்...



திரு V. கோபால் நாயுடு அவர்கள்.

லர் 1
தழ் 10

நவம்பர் '48.

விலை
அணா 4.

சினிமா அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த படம்

கோவை, எடிசன்ஸ் & லைட்ஹவுஸ்

ஆகிய இரு தியேட்டர்களில் நடைபெறுகிறது.

ராஜமுக்தி

கலைவாணர் M. K. தியாகராஜ பாகவதர்,

பானுமதி, சாமா

மற்றும் பலர் திறமையாக நடித்த படம்.

காணத்தவருதீர்கள் !

கோவை, நீலகிரி ஜில்லாக்களுக்கு

விநியோக உரிமை: வெரைட்டி ஹால் டாக்கீஸ்,

கோயமுத்தூர்.

P. VINCENT, Mg. Proprietor.

மகத்தான ஆரம்ப விழா!

31—10—48 தீபாவளி முதல்

கோவை, ஷண்முகா அரங்கில்

தந்தி: 'வசந்தா' கோயமுத்தூர். போன்: நெ 25

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர் ஆபீஸ் : சிங்காநல்லூர்

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்;

R. K. ஷண்முகம் செட்டி & பிரதர்ஸ்

1934-ளு கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்கமெடல் நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல் :

20 நெ. முதல் 44 நெ. வரை ஒத்தை முறுக்கு. காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லாவிதமான ஜவுளி ரகங்களுக்கும்,

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்டிங், மல், கதர் தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கெட்டில் பேர் பெற்றது 600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்

போன் : 70 தந்தி : 'ஸ்பின்னிங்'

ஸ்பின்னிங் அண்டு வீவிங்
கம்பெனி லிமிடெட்,
கோயமுத்தூர்.

மூலதனம் ரூ 25.00,000
செலுத்தின தொகை ரூ 20.76,900

டைரக்டர்கள் :

ஸ்ரீ வி. கோபால் நாயுடு
,, G. புருஷோத்தம நாயுடு
,, A. துரைசாமி நாயுடு
,, ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு
,, சி. ஆர். சதாசிவம்
,, ஆர். வி. லட்சுமைய நாயுடு
,, R. குருசாமி நாயுடு

கதிர்கள் 47,992 தறிகள் : 384

நூல் : 80 செ. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன் காரிகம், சலவை முதலிய எல்லா விதமான நூலும் கிடைக்கும்.

நெசவு : எல்லாவித ஜவுளிகள், உயர்ந்த ஷர்ட்டிங் லாங்லாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

சுதேச மூலதனம் தேசீயத் தொழில்
தேசீய நிர்வாகம்

Agents & Secretaries : M/s R. G. S. Naidu & Co.,
Partners :
V. Gopal Naidu & A. V. Srinivasalu Naidu,
COIMBATORE.

தந்தி : "பங்கஜா" போன் : 94.

பங்கஜா மில்ஸ்,

லிமிடெட்.

தபால்பெட்டி நெ. 150.

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : கோயமுத்தூர்.

கோயமுத்தூரில், பேர்பெற்றமில்களின் வரிசையில்சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

: ஸ்பின்னிங் :

80-நெ. வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில்

டப்ளிங்கும் தயாரிக்கப்படுகிறது.

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி தரப்பட்டு வந்துள்ளது

இந்திய முதல் இந்திய தொழிலாளர்

இந்திய நிர்வாகம்

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆதலால்

இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries:—

C. S. RATNASABHAPATHI MUDALIAR & SONS,

COIMBATORE.

திரு. C. R. சதாசிவம் அவர்கள்.

கோவைத் தந்தையெனக் கூறும் C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்களை அறியாதார் கோவையை அறியாதாரே. சென்ற இருபதாண்டுகளாக C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்களின் பொதுநலச்சேவையில் அவரின்கீழ் என்போன்ற பல தொண்டர்கள் தொண்டாற்றியதுண்டு அவர் கோவைக்குசெய்த சேவைகள் யாவும் பொன்னெழுத்துக்களால் எழுதத் தகுதிபெற்றவை. அன்னாரின் அருமைக் குமாரர் திரு. சதாசிவம் அவர்கள் தந்தையைப்போலவே நேர்மையும், நீதியும் பெற்ற சீலத்தார். தொழிலாளர்கள் மத்தியில் அவரது நிர்வாகத் தன்மை ஏனைய மில்களில் நிர்வாகிகளின் திறமையைவிட போற்றற்குரியதாகும். இவர் குழந்தை உள்ளத்தார். கடுகடுப்புடன் சில வேளைகளில் பேசியபோதிலும் கரவோ காழ்ப்போ ஏருத உள்ளம் பெற்றவர். இவரும் தந்தையைப்போலவே பொதுவாழ்வில் ஈடுபட்டு புகழெய்தி நீடுவாழ வேண்டுமென்பது நமது அவா. அக்காலத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம். வீரர் சதாசிவம் பொதுவாழ்வில் வாகைமாலை அணியும் நாளைக்கண்டு அகமகிழும் நாள அண்மையில்தான் என எதிர்பார்க்கிறோம்.

PHONE:
226



GRAM:
"BULLION"

உத்திர
வாதமுள்ள

KR

சில் பவுன்
தங்க நகைகள்



சிறந்த
வேலைப்பாடு



குறைந்த
கூலி

கிடைக்குமிடம்:-

கே. ஆர். அண் சன்ஸ்,

பெரிய கடை வீதி,

கோவை.

Phone { Office : 105
Residence : 47

SRI SARADA MILLS LTD.,

PODANUR. (COIMBATORE)

★

MANAGING AGENTS & SECRETARIES

V. S. SENGOTTAIAH & BROS.

★

SPINDLES	14,000	Looms 170
"	7000 (Ordered further)	

YARN	From 10s to 60s (Special Counts) Single & Double Yarn.
WEAVING	All kinds of Grey Long Cloth, Dhoties, Towels, Shirtings, etc., are manufactured. Our special qualities are 1001 and 1011 Grey Long Cloth, which are noted for their excellence in quality.



எம். ராமசாமி B. Sc.,

ஜானகி நிலயம்,
ரேஸ் கோர்ஸ்,
கோவை.

கோவை முரசு,
ஆசிரியர் அவர்களுக்த.

அன்பார்ந்த அய்யா,

கோவை முரசு என்ற மாதம் ஓர் முறை வெளிவரும் பத்திரிகையைக்கண்டு நான் மகிழ்ச்சியுறுகிறேன். கோவை மாநகரம் பெரிய தொழிற்பிரசித்திபெற்ற நகரம். இப்பெரிய நகரத்தில் கோவை முரசு போன்ற பத்திரிகையை மக்கள் வரவேற்பார்கள்.

அதனால் உங்களுடைய திறமையான முயற்சியினால், இப்பத்திரிகைமூலம் மக்களுக்கு நல்ல சேவை செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு, எம். ராமசாமி.

நடிகவேள் M. R. ராதா.



நடிகவேள் திரு. எம். ஆர். ராதா அவர்களைத் தமிழ் நாடறியும், தமிழ் மக்களுமறிவர். அவருடைய சீர்திருத்த நாடகம், நாடக உலகத்திலே எதிர் நீச்சுப் பாணியில் செல்லும் தகைமையுடையது. தமிழ்நாட்டு நாடக அரங்கிலே அவரை ஒரு மேலியரெனத் துணிந்து கூறலாம். ராதா போன்ற நெஞ்சத் துணிவும், சீர்திருத்த நோக்கங்கொண்ட நடிகர் தமிழ் நாட்டிலே அவர் தவிர இல்லையெனத் துணிந்து கூறலாம்.

வெல்க எம். ஆர். ராதா !

முக்கிய அறிவிப்பு.

கோவை முரசு இதழுக்குச் சந்தா செலுத்திய அன்பர்கள் அனைவருக்கும், இதுவரை இலவசமாக பிரதிகள் அனுப்பிய நேயர்களுக்கும், முக்கியமான ஓர் வேண்டுகோள். சந்தா செலுத்திய அன்பர்கள் அடிக்கடி கடிதம் எழுதியோ, அறிவுரை கூறியோ, தொல்லைதர வேண்டாமென தயைகூர்ந்து வேண்டு கிறோம். தவக்கத்திற்குக் காரணம் சொந்த அச்சகம் இல்லாமை ஒன்று. நான்குபேர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய வேலையை நிர்வாக ஆசிரியர் ஒருவரே செய்வதால்தான் பிரதிகள் தவணைப்பட்டு வெளிவரு கிறது. பத்திரிகைகளை கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய மாதத்தையோ, தேதியையோ கணக்கு வைத்துக்கொண்டு நமக்குத் தொல்லைதர வேண்டாமென மீண்டும் விரும்புகிறோம். சந்தா அனுப்பாத நேயர்கள் உடனே அனுப்பி ஆதரவு தர பன்முறையும் பணிவோடு வேண்டுகிறோம்.

காலப்போக்கில் எல்லா சிறந்த அம்சங்களையும் ஏற்று வார வெளியீடாய் வருமென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

— ஆசிரியர்.

"கோவை முரசு"

சூலூர் P. O (கோவை ஜில்லா)

சந்தா விபரம்.

உள்நாடு தனிப்பிரதி	0—4—0	ஆண்டு சந்தா ரூ.	3—0—0
வெளிநாடு ,,	0—5—0	,,	4—0—0

விளம்பரம்.

வெளி அட்டை	ரூ. 100-0-0	உள் அட்டை	ரூ. 75-0-0
சாதா பக்கம்	ரூ. 50-0-0	அரைப் பக்கம்	ரூ. 25-0-0

கோவை
முரசு

மலர் 1	நவம்பர் 48	9, இதழ் 10

அறிஞர் சண்முகத்தின் ராஜிநாமா

அறிஞர் சண்முகத்தின் பதவித்துறவு நாட்டாரின் கவனத்தை இன்று ஈர்த்திருக்கிறது; அரசியல் வட்டாரத்தை அலமறச் செய்திருக்கிறது. ஏன்?

திரு. சண்முகத்திடம் திறமையுண்டு; தகுதியுண்டு; இருப்பினும் இந்த மேலான குணத்திற்கு எதிராக அவரிடம் நேர்மையில்லை; தன்னலமற்ற சேவையில்லை; தியாக சிந்தையில்லை.

திரு. சண்முகம் அறிஞர்தான்; ஆற்றல்மிக்கவர்தான்...... அவர் நாடாளும் மன்றத்தில் எத்தகைய வேலையையும் செய்துமுடிக்கும் சீலம் பெற்றவர்தான். என்னுடையராயினும் மக்கள் இருதய பீடத்தை அவர் சேவை இதுநாள் வரை தொட்டதில்லை. அதன் காரணமாகத்தான் நாம் வருந்தி சில வார்த்தைகளல்ல, சில பக்கங்களில் அவரது பொதுப்பணி வாழ்க்கைக் குறிப்புகளை வெளியிட முயல்கிறோம்; வேறு விபரீதத்தாலல்ல.

திரு. சண்முகம் அவர்களுக்கு அறிவுரை கூற எத்தனிக்காவிட்டாலும் அறவுரை கூறி நமக்குத் தலைவராக வேண்டுவது குறித்து அவரது வாழ்க்கைப்பாதையை மாற்றுமாறு விரும்புகிறோம்.

சர். சண்முகம் செட்டியாரை தூற்றிய காலத்திலெல்லாம்

அவரது திறமையைக் குறித்துப் போற்றிப் புகழ்ந்தவர்கள் நாங்களே. அவர் நிதியின் காவலாக இருந்ததுபற்றி அகமும், முகமும் மலர மகிழ்ந்தவர்களும் நாங்களே. அத்தகைய நாங்கள் இன்று அவரை விரோத மனப்பான்மையால் எந்த வார்த்தைகளாலும் அவர் நெஞ்சைத் துளைக்க வேண்டுமென விரும்பயிடமுண்டா? அவரின் திறமையைக் குறித்தோ தகுதியைக் குறித்தோ நாம் குறை கூறவில்லை. அவரின் கடுகுள்ளத்தைப்பற்றி; நிலையில்லா கொள்கையைப் பற்றித்தான் குறைகூறுகிறோம், அவர் நிறையுடைய நம்பியாகும்பொருட்டு.

திரு. சண்முகம் வெல்லிங்டன் ஆட்சியில் மோகனசுந்தரியாயிருந்தார். வெள்ளையரசாங்கத்தில் செல்வமணி செந்துவர் வாய் சிந்தாமணியாயிருந்தார். மோகன் கரன் சந்திரரின் மோகனப் புன்னகையில் மயங்கிய மதிவதனியாயிருந்தார். நீதிக் கட்சியின் வெண்ணுடை வீரர் தியாகராயரின் திருச்சபையின் ஆனந்த நர்த்தினியாயிருந்தார். சுயமரியாதை இயக்கத்தின் சோபைதரும் முத்துப் பல்லழகியாயிருந்தார். முடிவில் காஷ்மீர் அந்தணர் நேருவின் பொன்னவையின் மின்னழகியாயுமிருந்தார்......முடிவில் கோவையில் தனது பங்களாவிலே பரந்த உலகமென பதவியற்று வாழ்கிறார். ஏன்?

சண்முகம் செட்டியாராயிருந்து சர். ஆர். கே. சண்முகம் செட்டியாராகி! சர். சண்முகம் K. C. I. E. ஆகி பின் ஆனரபில் டாக்டர் சண்முகமாகி இன்று டாக்டர் சண்முகமாக விளங்குகிறார். இத்தனை மாறுபாடுகளில் அவரது அரசியல் வாழ்க்கையும் பலவித மாற்றுடையனவாகவே விளங்கியிருந்தன.

பரந்த சாம்ராஜ்யத்தை சாரத்தியம் செய்யும் அரசியல் சாரதியாயுமிருந்தார். சுண்டைக்காயளவுள்ள சம்ஸ்தானத்தின் அமைச்சராகவுமமைந்தார்.

திரு. சண்முகத்தின் லட்சியம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருளீட்டுதலில் ஈடுபட்டிருந்ததே ஒழிய நாட்டின் நலனைக் குறித்து விளங்கியதில்லை. ஓட்டவா மகாநாட்டுத் திறப்புவிழாவிலிருந்து வாரியர் வைத்தியசாலைத் திறப்பு விழாவரை நடத்தியவர் நமது சண்முகம்.

திரு. சண்முகத்திடம் மட்டும் ஒரே நோக்கம், ஒரே கொள்கை ஒரே லட்சியமிருக்குமானால் உலக அறிஞர்களிலே

தலைசிறந்தவராக விளங்கியிருப்பார். கணத்திற்கு கணம் அங்கொன்று இங்கொன்றாய் தோன்றும் மின்னல்வெட்டுப் போல அவரது அரசியல் வாழ்க்கை கடந்த காலத்தில் விளங்கின. நிரந்தர லட்சியமில்லாததால் மக்களின் இதயாபிமானத்தை இம்மியும் இவர் தொடுவதற்கு வகையோ வழியோ அமையவில்லை.

நிதி மந்திரியாயிருந்த சண்முகம் பாட்டாளியின் நலனை-நடுத்தர வர்க்கத்தாரின் வாழ்வை-கிஞ்சிற்றேனும் கவலை கொள்ளவில்லை. கவலை கொண்டிருந்தால் வெள்ளையர் ஆட்சியில் சட்டசபைத் தலைவராக இருக்கும்போது எதிர்ப்பேற்பட்டிருக்குமா? கொச்சி சமஸ்தானத்தின் திவானாக இருந்தபோது பலத்த போட்டி கிளம்பியிருக்குமா? நீதிக் கட்சியின் பிரபல தலைவராக இருக்கும்போது தூஷணைகள் கிளம்பியிருக்குமா? நிதியின் காவலாகச் சென்றபோது மாறுபட்ட சக்திகள் முஷ்டியைத் தூக்கிக் காட்டியிருக்குமா?

திரு. சண்முகம் பதவிவகித்த காலத்திலெல்லாம் பொதுமக்கள் அடைந்த பரிசென்ன? நெருப்புப் பெட்டிக்கு வரி கொடுத்தனர். புகையிலையை அதிக வரி கொடுத்து வாங்கினர். காபியையும் டீயையும் குடிக்க வகையற்றவராயினர்.

திரு. சண்முகனார் செங்கோல் நடாத்தியகாலத்தில் இரும்புப்பெட்டிக் காவற்காரர்களான பணமூட்டைகள் வருமான வரியைக் குறைத்துக் கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர், கூலியாட்களின் வீட்டிலே அடுப்பு பாதிநாள் அவிந்து கிடக்கும்பொருட்டு. அமிதலாப வரியை அதிகம் கொடுக்க வேண்டாமென முதலாளிகளின் சார்பாகச் சட்டம் செய்தார், பாட்டாளியின் வயிற்றுச் சோற்றைப் பிடுங்குவதற்காக.

ஸ்டர்லிங் நிதி ஒப்பந்தத்தை ஆங்கில சர்க்காருடன் சுமூகமாக முடித்தார். இதை மறுக்கமுடியாது. ஆனால் சண்முகத்தின் திறமையை அளக்கும் அளவுகோலாக இச்சம்பவம் அமைந்துவிடவுமில்லை. ஏன்? கொள்ளையடித்த வெள்ளையர்களின் கம்பெனிகள், தொழிற்சாலைகள், தோட்டங்கள், வியாபாரங்கள் இவைகளை இந்தியாவைவிட்டுக் கப்பலேறுதபடி பாதுகாத்து ஆக்கந் தேடித்தந்தார். ஸ்டர்லிங் விஷயத்தில் இவரைவிட நன்றாக அனுபவத் தேர்ச்சியுடனே நுணுக்க அறிவுடனே மற்றவர் சாதித்திருக்க முடியாதென்பதுமட்டும் உறுதி.

முடிவாக சண்முகம் செய்த சேவைகளில் பெரிதெது? அவரின் நிதிமந்திரிப் பதவித் துறவே. அவர் தம் பதவியைத் துறந்ததாலேயே இன்று அவர் மன அமைதிகொண்டார். மற்ற மக்களும் அகமகிழ்வுற்றனர். பணக்கார சகாக்களுக்காக பாடுபட்ட சண்முகம், தனது சேவையில் கால்பங்கேனும் பொதுமக்களுக்காக சேவை செய்திருப்பாராஞல் அவரின் நிலை அடையவேண்டிய அவசியமேயில்லை அறிஞர் கிராம்வெல்லின் சரிதத்தை சண்முகம் இன்றுணர்கிருரா?

இதுவரை சண்முகத்தின் வாழ்க்கை கரடுமுரடு கூடிய கருங்கற்பாரையாயிருந்தது தொலையட்டும்! இனியேனும் புதிய சண்முகமாக மாறி தமிழர் தலைவராக இருப்பாரென எதிர்பார்க்கிறேம். "ஆர். கே. சண்முகமே! எங்கள் ஆதிக்கமே!!" என்று பொதுமேடையில் நாங்கள் பாடிய பாட்டைப் பொய்யாக்காது தமிழர் நலனுக்காக அவரது முழு சக்தியையும் அளிப்பாரென எதிர்பார்க்கிறேம். வடநாட்டு பவநகர் மகாராஜா தென்னுட்டு மாநிலக் கிழவராக வந்திருக்கவேண்டிய அவசியமில்லையே. அறிஞர் சண்முகம் இருக்கும்போது, சண்முகத்தின் ராஜிநாமா குறித்து பெருமைப்படுகிறேம். அந்த ராஜிநாமா தமிழர் வாழ்விற்கு வளமூட்டுவதாயிருக்கவேண்டுமென விரும்புகிறேம் "அறிஞர் சண்முகமே வருக! வந்திங்கு தமிழணங்குக்கு வாழ்வளிக்க வாளேந்துக! வாளேந்திச் செல்லுங்காலத்து உன் தாளேந்தி மற்றவர்கள் வாழ்வு கண்டுகளிக்கும் நாளெந்த நாள்? உன் ராஜிநாமா புதியதமிழகத்திற்கு மெருகிட்டளிக்கும் சொர்ண மணிக் கோயிலாக இருக்கவேண்டுமென்பதே எமது விருப்பம்.

மே. தூ. ஜின்ஞு மறைவு.

மேன்மை தங்கிய பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜின்ஞுவின் மறைவு குறித்து பெரிதும் வருந்துகிறேம். பாகிஸ்தானின் இணையற்ற தலைவர் மறைந்துவிட்டார். பாகிஸ்தானும் பலவீனமடைந்தது. அகில உலக அரசியல் வானிலும் ஒரு சுடரொளிக் தாரகை அவிந்தது. பாகிஸ்தான் குழந்தைப்பருவமாக இருக்கும்போது ஜின்ஞு மறைந்தது முஸ்லீம் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத ஓர் மாபெரும் நஷ்டம். ஜின்ஞுவைப்பற்றி இந்துஸ்தான் சரித்திரம் எப்படி சாற்றியபோதிலும் அவர் போன்ற உறுதியும் வைர நெஞ்

சும், திடசித்தமும் வைராக்கிய தலைவருள்ளமுங்கொண்ட காந்திஜீயைத் தவிர வேறு உவமை சொல்ல சக்தியற்ற தாகும்.

கவிஞர் இக்பால் கண்ட பாகிஸ்தான் கனவை நனவாக்கியவர் ஜின்னு அவர்களே. காங்கிரஸ் 60 வருட போராட்டத்திற்குப் பின்புதான் விடுதலை கண்டது. ஜின்னுவின் தலைமையில் 6 வருடத்திலே முஸ்லீம் லீக் பாகிஸ்தானைப் பெற்றது.

ஜின்னு அவர்களின் மறைவு பாகிஸ்தானுக்கு மட்டு மல்ல; இந்துஸ்தானுக்கு ஓர் அதிர்ச்சியைத் தரக்கூடியதே: ஜின்னுவின் மறைவுக்குப் பின் பாகிஸ்தான் பாதாளத்தில் அமிழ்ந்துவிடுமா என்பனபோன்ற ஐயுறத்தக்க கேள்விகளைக் கிளப்பி வாதப்பிரதி வாதங்களுக்கு இடந்தருவதைவிட இதுநாள்வரை இரண்டு டொமினியன் மக்களிடை காணப்பட்ட மதப் போரும் வகுப்புத்தொல்லையும் ஒழிந்து சௌஜன்ய முறையில் வாழ்தலே வளமென நாம் விரும்புகிறோம்; அதுவே இருடொமினியன் மக்களும் ஒரு தன்னேரற்ற தலைவருக்குச் செய்யும் தக்க மரியாதையுமாகும்.

ஜின்னு போன்ற தலைவர்கள் அபூர்வமாகப் பிறக்கக் கூடியவர்கள். அத்தகைய பெரியார்களிடை சில குணங்கள் கேடு விளைவிக்கத் தக்கதாகவுமிருக்கலாம். இருப்பினும் பல போற்றற்குரிய பண்புகளை வையத்தார் வாழ்த்தி வணங்குதலோடு நின்றுவிடாது அந்நெறி நின்றும் பணியாற்ற முயலவேண்டுவதே முக்கியம்.

ஜனப் ஜின்னு நாமம் வாழ்க!

முகப்புப் படம்:

கம்மவார் குலத்தில் தொழிலரசன். பொதுநலப் பற்றுள்ளம் படைத்த பெரியார். கோவை C. S. & W. மில்ஸின் மானேஜிங்-ஏஜெண்ட் V. கோபால் நாயுடு அவர்கள். இவரை கோவை மாவட்ட மக்களுக்கு நாம் அறிமுகப்படுத்த வேண்டிய அவ்வளவு அவசியமில்லை. இவரது தாளாண்மையும் தகுதியறிந்து செய்யும் பொதுப் பணியாற்றலும் போற்றற்குரியவை. சிறந்த சீலம் வாய்ந்த செம்மை மனத்துடையார் அதுபோன்ற சிவந்தளிக்கும் கையுடையவருமாவார்.

“தொழில் மயம் முதலிலும், தேசீய மயம் அடுத்தும் இருப்பதே ஜனநாயக சுதந்திர சர்க்காரின் லட்சியமாக இருக்கவேண்டும். தென்னாட்டுத் தொழில் அறிஞர் முன்னிலையில் விஞ்ஞானிகளுள் தலைசிறந்த

சி. வி. ராமன் அறிவுரை.

ஜூன் 28-ஆம்தேதி மாலை 5-30 மணிக்கு தொழில் கல்வி கண்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த ‘கோபால் பாக்’கில் சர். சி. வி. ராமன் அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு தொழில் நிபுணரும் அறிஞருமான திராவிட திலகம் ஜி. டி. நாயுடு அவர்கள் ஏற்பாடு செய்திருந்த உபசரிப்பு விழாவிற்குப் பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

சர். சி. வி. ராமன் அவர்களை வரவேற்றுப் பேசுகையில் நாயுடு அவர்கள் இந்திய விஞ்ஞானிகளுக்குள்ள கஷ்டமான நிலையையயம், அவர்களுக்கு சர்க்கார் அளிக்கும் மிகச் சிறு உதவியையும்பற்றிக் குறிப்பிட்டார். சர். ராமன் போன்ற அறிஞர்களுக்கு ஆராய்ச்சிக்குத் தேவையான உதவிகளை மட்டும் சர்க்கார்செய்து கொடுத்து அவர்களைத் தங்கள் ஆராய்ச்சிகளில் மட்டும் ஈடுபட்டிருக்கும்படியாய் விடுவார்களானால் எவ்வளவு உன்னதமான முன்னேற்றத்தை நமது தேசம் அடையக்கூடும் என்பதை அளவிட்டுச் சொல்ல முடியாது எனச் சொன்னார்.

சர். சி. வி. ராமன் பதிலளிக்கையில், தாம் சமீபத்தில் ஐரோப்பாவில் கண்ட வியக்கத்தக்க மாறுதல்களைப் பற்றியும் அவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய படிப்பினை பற்றியும் தெளிவுடனும், சுவையுடனும் விளக்கிக்கூறினார்.

“யுத்தத்தால் அடிபட்ட பிரிட்டனைப்பாருங்கள். யுத்தகாலகஷ்டங்கள் அவர்களது தொழில்திறமையையும் முயற்சியையும் சிறப்பித்திருக்கின்றன, நாமும் தொழில்களை நடத்தி தீவிரமாக முன்னேற்றப் பாதையில் செல்லாவிட்டால் பின்னால் வருத்தமும் நஷ்டமும் தான் ஏற்படும். தொழில்களே நமது நாட்டில் சரிவர நிர்மாணமாகாதிருக்கும்போது தொழில்களை தேசியமயமாக்கும் பேச்சு குதிரைக்கு முன்னால் வண்டி பூட்டுவதுபோலாகும். இன்னும் திருத்தமாய்ச் சொல்லவேண்டுமானால் வண்டியும் குதிரையும் இல்லாமலேயே அவை இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வதற்கொப்பாகும்.

“தொழில்களை முதலில் தொடங்கி நடத்தட்டும். தேசியமயமென்பதெல்லாம் தாமாகப் பின்னால் வரும். அதைப்பற்றிய கவலை இப்போது தேவையில்லை. முதல் விஷயங்கள் என்றும் முதலில் வரவேண்டும். இதை ஜனநாயக சுதந்திர சர்க்கார் மறந்துவிடக்கூடாது. சுதந்திர இந்தியாவில் முதலில் செய்தால்தான் நாம் செல்வமடைந்தவர்களாவோம். முதலில் வைக்கவேண்டியவற்றை முதலில் வைப்பதின் அவசியத்தை

அறிந்துகொள்ளும்வரை, நாம் மேலோங்கமாட்டோம். நான் சந்தேகிக்ககூடியவனல்ல, எதையும் உறுதியாக நம்புகிறவன்," என்று ஜூன் 28-ம்தேதி மாலை 'ராமன் சக்தி' யைக் கண்டுபிடித்து உலகத்தின் சிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவராக விளங்கும் சர். சி. வி. ராமன் சொன்னார்.

"யுத்த பிற்கால ஐரோப்பிய விஞ்ஞானமும் தொழில்முறையும்" எனும் பொருள்பற்றி சொற்பொழிவு ஆற்றுங்கால் பாரிஸ், பர்மிங்ஹாம், லண்டன் முதலிய நகரங்களில் தாம் கண்ட வியக்கத்தக்க விஷயங்களை விரிவாகச் சொன்னார்.

பழைய உலகிற்கு வழிகாட்டியாகவும், கலா சாஸ்திரங்களுக்குத் தாயகமாகவும் இருந்த கிரீஸ் நாட்டைப் பற்றியும் அந்த நாட்டில் தோன்றிய பேரறிஞர்களான சாக்ரடீஸ், பிளாடோ, அரிஸ்டாட்டில் முதலானவர்களைப் பற்றியும், பெரிய அரசியல் நிபுணர்களைப்பற்றியும், சிற்பம், உடற்பயிற்சி ஆகிய சாஸ்திரக் கலைகள் பெற்றிருந்த உன்னத நிலைபற்றியும் எடுத்துரைத்தார்.

வயிரம், ப்ளாஸ்டிக், ராடர், பௌதிகம், உயிர் நூல் ஆராய்ச்சி முதலான விஷயங்களை சர். சி. வி. ராமன் நகைச்சுவையும் பொருட்சுவையும் கலந்து அருமையாக சொற்பொழிவாற்றினார்.

★

குரு ராஜா ஆயில் மில்ஸ்

★ உபயோகத்திற்கு உகந்தது
★ குணத்திலும் மணத்திலும் சிறந்தது
★ சுத்தமாகவும் தெளிவாகவுமுள்ளது
★ நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டது
★ மொத்த வியாபாரிகளுக்கு ஏற்றது.

கடலை எண்ணெயும், தெளிவான தேங்காய் எண்ணெயும் மொத்தமாகக் கிடைக்கும்

விபரங்களுக்கு:—

குரு ராஜா ஆயில் மில்ஸ்,
அவினாசி ரோடு, கோயமுத்தூர்.

மொழிவாரி மாகாண கமிஷன் உறுப்பினர்களுக்குத் தொழிலறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களுடைய

உபசாரணை.

கோயமுத்தூர், 25–9–48.

மொழிவாரி மாகாணக் கமிஷன் தலைவர் எஸ். கே. தார், காரியதரிசி பானர்ஜி, அங்கத்தினர்கள் டாக்டர் பன்னுலால், ஜகத் நாராயணலால் ஆகியவர்களைக் கவுரவிக்கும் பொருட்டும், கோவை மக்களின் கருத்துக்களைத் தெரிவிக்கும் பொருட்டும், தொழில் நிபுணர் ஜி. டி. நாயுடு தமது இல்லமாகிய 'கோபால் பாக்'கில் 23-ம்தேதி மாலை ஒரு தேநீர் விருந்துபசாரம் ஏற்பாடு செய்திருந்தார். திடீரென்று மொழிவாரி மாகாண கமிஷன் அங்கத்தினர்கள் வெளியூர் சென்றுவிட்டதால், அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாமற் போயிற்று. ஆனாலும் தேநீர் விருந்துபசாரம் நடந்தது, பிரமுகர்களின் சொற்பொழிவுகள் ஒலிப்பதிவு (Electrical Recording) செய்யப் பெறறன. ஜி. டி. நாயுடு அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது.

"தங்களது சொந்தக் காரியங்களுக்காக சில தலைவர்கள் மொழிவாரி மாகாணப் பிரிவினையைக் கோருகிறார்கள். அக்கோரிக்கைக்கு ஆதாரம் கிடையாது. மொழிவாரி மாகாணப் பிரிவினை நாடும், மக்களும் இன்று இருக்கும் நிலையில் அவசியம் இல்லை. அத்தகைய பிரிவினையால் பொருளாதார நெருக்கடியும், சமாதான பங்கமும், வீண் தொல்லையும் ஏற்படுவதுதான் உண்மை.

"நாட்டிலுள்ள தீமைகளைக் களைந்து எல்லோருடைய நன்மைக்குமான இந்தியாவை சிருஷ்டிக்க ஒரு ஹிட்லர் அல்லது ஸ்டாலின் தேவை, அத்தகைய சர்வாதிகாரி கிடைக்கா விட்டால் உலகத்தின் மற்ற நாட்டவரைப்போல நாமும் முன்னேற வழி—உள்ள ஒரே வழி—நீதி, நிர்வாக பாதுகாப்பு சவுகரியங்களுக்காக தென் இந்தியாவைத் தனி நாடாகப் பிரித்து மீதமுள்ள இந்தியாவை இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரித்து அவை எல்லாவற்றிற்கும் பொதுவாக உள்ள விஷயங்களில் அவைகளுக்குள் உடன்பாடு அல்லது ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளுவதுதான் உசிதமாகும். இத்தகு பிரிவினைக்குப்பின் நமக்குள் இருக்கும் எல்லா வேறுபாடுகளையும் மறந்துவிட்டு, அரசியல், சமூக, பொருளாதார, தொழில் முறை ளில் தேசம் முழுவதும் வளமபெற்று உயரவேண்டுமென்பதற்காக எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு, சர்க்காரும், பொதுமக்களும் ஒத்துழைத்து இந்தியப் பெருநாட்டை சுதந்திர சோஷியலிஸ்ட் குடியாசுகள் நிரம்பிய தேசமாக அமைத்து மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாக இருக்கச் செய்யவேண்டும்"

ஜி. டி. நாயுடு சொற்பொழிவு முடிந்ததும், அரசியல் நிர்ணய சபை அங்கத்தினா சி. சுப்பிரமணியம்' கோவை என். லட்சுமணன், என். ஜே. ராஜகோபால்,

ராவ்பகதூர் ராமச்சந்திரம் செட்டியார் பி.எ., பி.எல்., பப்ளிக் பிராசிகூடர் கே. கஞ்சுண்டய்யா, மா. திருஞானசம்பந்தம் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

மறுநாள் (242) மொழிவாரி மாகாண கமிஷன் அங்கத்தினர்கள், தலைவர், காரியதரிசி, திருமதி. ஜகத் நாராயணலால் ஆகியோர் ஜி. டி. நாயுடு அவர்களுடைய உபசரிப்பை ஏற்க மாலை 5-மணிக்கு வந்தனர். ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்த சொற்பொழிவுகளைக் கேட்டனர். சிற்றுண்டி உண்டனர். பின்னர் புகைப்படம் எடுக்கப்பட்டது. திரு. ஜி. டி. நாயுடு அவர்களுடைய பருத்தி, சோளச் செடிகளைப் பார்வையிட்டு, தொழிலறிஞர் திறமையை வியந்து பாராட்டினர்.

★

உலகமே தீமை செய்தாலும் நாம் தீமை செய்யலாமா?

— மகாத்மா.

ஆனால் சில காங்கிரஸ் தோழர்கள் பிறருக்குத் தீமை செய்வதே, தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளார்கள். இது ஞாயமா?

— ஆசிரியர்.

நாணயம்!

நம்பிக்கை!!

விலை நயம்!!!

★

பட்டு & நூல்

ஜவுளி ரகங்களுக்கு

சிறந்த இடம்

P. A. ராஜு செட்டியார் & Co.,

ஜவுளி வியாபாரம்,

ராஜ வீதி, : : கோயமுத்தூர்.

ஆலைத் தொழிலாளி.

-: பாரதிதாசன் :-

ஆலையின் சங்கே. நீ ஊதாயோ? மணி
ஐந்தான பின்னும் பஞ்சாலையின்........
காலை முதல் அவர் நெஞ்சம் கொதிக்கவே
வேலை செய்தாரே என் வீட்டை மிதிக்கவே

ஆலையின் சங்கே........

மேலைத் திசைதனில் வெய்யிலும் சாய்ந்ததே
வீதி பார்த்திருந்த என் கண்ணும் ஓய்ந்ததே
மேலும் அவர்சொல் ஒவ்வொன்றும் இன்பம் வாய்ந்ததே
விண்ணைப் பிளக்கும் உன் தொண்டையேன் காய்ந்ததே

ஆலையின் சங்கே... ....

குளிக்க ஒரு நாழிகையாகிலும் கழியும்
குந்திப் பேச இரு நாழிகை ஒழியும்
விளைத்த உணவிற் கொஞ்ச நேரமும் அழியும்
வெள்ளி முளைக்கு மட்டும் காதல் தேன் பொழியும்

ஆலையின் சங்கே.......

"பத்திரிகைத் தொழில்"

பொது சேவையா, சொந்தத் தொழிலா?

அறிஞர் C N அண்ணாத்துரை M A.

அண்ணா: வணக்கம் ம. பொ.; பத்திரிகைத் தொழில் பொது சேவையா? சொந்தத் தொழிலா? என்பது பற்றி, இப்போது நாம் விவாதிக்கப் போகிறோம்.

ம. பொ. சி.: ஆமாம்; பயனுள்ள விவாதம். நாம் மட்டும் விவாதித்தால் போதுமா? நாட்டு மக்களும் விவாதிக்க வேண்டுமல்லவா?

அண்ணா: நாம் அதைத் துவக்கி வைப்போமே. தங்கள் கருத்து என்ன? பத்திரிகைத்தொழில் எப்படிப்பட்டது; பொது சேவையா, சொந்தத் தொழிலா?

ம. பொ. சி.: பத்திரிகைத்தொழில் மட்டுமா; நாட்டிலே உள்ள எந்தத் தொழிலும் பொதுசேவையை நோக்கமாகக் கொண்டதாக இருக்க வேண்டுமே யொழிய, சொந்தத் தொழிலாக மட்டும் இருப்பது சரியல்ல.

அண்ணா: ஆமாம் சிறந்த இலட்சியம் தாங்கள் சொல்வது. நாட்டு மக்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் சொந்த நலனுக்காக மட்டும் அமைவது கூடாது.

ம. பொ. சி. பொது நலனுக்கு உகந்த முறையிலே ஒவ்வொருவர் செய்யும் காரியமும் இருக்கவேண்டும்.

அண்ணா: நடைமுறையைக் கவனிப்போம்.

ம. பொ. சி.: கவனிப்போம் நண்பரே! ஆனல் நான் கூறிய அந்தச் சிறந்த இலட்சியம் நிறைவேறும் வகையிலே நடைமுறை இருக்கிறதா என்று பார்த்து இல்லை யென்றால் இலட்சியம் நிறைவேறும் விதத்தில் நடைமுறையைத் திருத்தி அமைக்கவேண்டும்.

அண்ணா: இந்த நல்ல நோக்கத்துடன் பத்திரிகைத் தொழில்பற்றிக் கவனித்தால் தங்களுக்கு என்ன தோன்றுகிறது?

ம. பொ. சி.: பொது சேவையா சொந்தத் தொழிலா, இந்தப் பத்திரிகைத் தொழில் என்று தானே கேட்கிறீர்கள்?

அண்ணா: நம்மைக் கேட்கிறார்கள் இருவரையும்.

ம. பொ. சி.: ஆமாம். ஆமாம்; எந்தத் தொழிலும் சொந்த லாபத்துக்காக மட்டும் அமைந்தால் நல்லதல்ல அல்லவா?

அண்ணா: நல்லதல்ல. அவ்விதம் சொந்த லாபத்தை மட்டுமே நோக்கமாகக்கொண்டு, தொழில்கள் அமைவதால், நாட்டிலே பொருளாதார பேதமும், சமூகத்தில் அமைதியின்மையும், தலைவிரித்து ஆடுகிறது உலகெங்கும்.

ம. பொ. சி.; அப்படிப்பட்ட உலகுக்கு உள்ளத்தில் பண்பை உண்டாக்கும் உயர்ந்த காரியத்தில் பத்திரிகைகள் ஈடுபடவேண்டும்.

அண்ணா: ஆமாம். அந்த நோக்கத்தைத் தளராது கைக்கொண்டால் அதைவிடச் சிறந்து பொதுச் சேவை வேறு கிடையாது.

ம. பொ. சி.; நோக்கம் சிலாக்கியமானதாக இருக்கவேண்டும். காரியமும் அதுபோலவே அமையவேண்டும் பொது மக்கள் நலனுக்குப் பாதுகாவலன் என்று விளம்பரப்படுத்திக் கொண்டால் மட்டும் போதுமா?

அண்ணா: நோக்கமும் நடைமுறையும் ஒன்ருக இருந்தால் தான் உயர்வு. இந்த முறையிலே பார்க்கும் பொழுது, பத்திரிகைத் தொழில் அதாவது நடத்துபவரின் இலாபத்தைத் தேடித் தரும் சாதனம் என்று இருக்கக் கூடாது—பொது சேவை புரியும் சந்தர்ப்பம் என்ற முறையில் அமையவேண்டும்.

ம பொ. சி. ஆமாம், இதை யார் மறுக்க முடியும்? பத்திரிகையை பல சர்க்குக் கடை போல, இரும்புத் தொழிற்சாலையைப் போல, இலாபந் தரும் தொழிலாக—என் சுகத்துக்கு என் வாழ்வுக்கு, என் குடும்பத்துக்கு, எனக்குச் சேர்த்துச் சுகம் தேடிக்கொள்ள நிலபுலம் தேட உபயோகித்துக் கொள்கிறேன் என்று யார் கூறுவார்கள்.

அண்ணா: கூற மாட்டார்கள். ஆனல் பத்திரிகைத் தொழிலிலேயும் மற்றத் தொழில்களின் மூலம் பணம் குவிப்பது போல் குவிக்க முடியும் என்பது உண்மைதானே.

ம. பொ. சி.; உண்மைதான். பணம் திரட்ட முடியும்; திரட்டியுமிருக்கிருர்கள்.

அண்ணா: அது போலவே, பத்திரிகைத் தொழிலிலே, வேறு தொழில்களுக்குப் போடுவது போலவே பெரும் மூலதனம் போடுகிருர்கள்; ஆயிரக் கணக்கில் ஆட்களை அமர்த்துகிருர்கள்; நவீன விஞ்ஞான சாதனங்களை அமைக்கிருர்கள். வியாபார முறைகள் அனைத்தும் அந்தத் தொழிலுக்கு இருக்கக் காண்கிரேம்.

ம. பொ. சி.; அமைப்பு, அளவு, பயன் ஆகிய எதைக் கவனித்தாலும் பெரிய தொழிற்சாலை போன்றே காணப்படும் பத்திரிகை நிலையங்கள் பல உள்ளன, இந்த நாட்களில்.

அண்ணா: ஆமாம் இந்தப்பத்திரிகை பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன. இதிலே விளம்பரம் செய்வதென்ருல், அங்குலத்துக்கு இருபது ரூபாய் தரவேண்டும். பன்னிரண்டு பக்கம் கொண்டதாக பத்திரிகை இருந்தால், அதிலே விஷயங்கள்கருத்துகள், ஆறுபக்கம் தேறும் மற்ற இடம், விளம்பரம்—என்று இதுபோன்ற நிலையிலே உள்ள பத்திரிகைகள் நடத்தப்படுகின்றனவே. இலட்சக்கணக்கான வரவு செலவுள்ள பெரிய தொழில்—ஆயிரக் கணக்கில் வேலை செய்வோர் உள்ள இடம். அப்படிப்பட்ட பத்திரிகைகளை—பொதுச் சேவை என்று கூற முடியுமா? அதன் உரிமையாளரின் வருவாயும், வாழ்க்கை நிலையும் அவருடைய நில புலங்களும் மோட்டார் வசதிகளும், இலாபத்தின் விளைவுகள் அல்லவா? அவ்வளவு

இலாபகரமான தொழிலை— அவரை மாளிகைவாசியாக்கி சீமாஞக்கி வைக்கும் தொழிலை, வாய் கூசாது, எப்படிப் பொது சேவையென்று கூறுவது? — கூறினல், பொதுமக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? சேலை விற்றுச் சீமாஞகிருன் ஓர் வியாபாரி — செய்தியை விற்றுச் சீமாஞகிருன் இந்த வியாபாரி—பத்தாயிரம் முதல் போட்டுப் பட்டாடை கடைவைத்துப் பத்தின் மூலம் அறுபது வரை இலாபம் கண்டான் ஒரு முதலாளி-அது போலவே பத்தோ எட்டோ, முதலாக வைத்துப் பத்திரிகையைத் துவக்கியவர் பத்தாயிரம் ரூபாய் மோட்டாரும், நாற்பது ஐம்பதாயிரத்தில் மூலம் பெறுகிருர். அவருடைய மாளிகையும் லாபத்தின் தொழில்மட்டும் பொது சேவை என்று எப்படிக் கூறுவது? ஏன் கூறவேண்டும்— கூறுவது எப்படிப் பொருத்தமாகும்.

ம. பொ. சி.: எங்கள் சொந்தத் தறியில் தயாரித்தது — சாயத்துக்கு உத்தரவாதம், என்றுஜவுளிக்கடைக்காரர் தமது தொழிலுக்குச் சிறப்புரை கூறி, விற்பனையை அதிகப்படுத்துவது போலவேதான் எங்கள் பத்திரிகைக்கு, விசேஷ, பிரத்தியேக நிருபர்கள் உண்டு. பாரிஸ் மகாநாட்டுக்குத் தனி நிருபரை அனுப்புகிறேம். செய்திகள் பூரணமாக வெளிவருவது எங்கள் பத்திரிகையில் தான், என்று சிறப்புரை கூறி பத்திரிகையைப் பரப்புகிருர் அந்த வியாபாரி. செய்திகளைப் பண்டமாகவே கருதுகிருர், செய்திகளைத் திரட்டுவதற்குச் செலவாகும் தொகை, மற்ற வியாபாரத்தில் பொருள் செய்வதற்கு ஆகும் தொகை போலத்தான் — இலாபத்துக்கே செய்திகளும் விற்கப்படுகின்றன. இது சொந்தத் தொழில்— இலாபந்தரும் தொழிலாகத்தான் ஆகிறது.

அண்ணு: மேல்நாடுகளிலே உள்ள பத்திரிகைகள்—ஒவ்வொன்றும் பலப்பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன. இலாபம் ஏராளமாகத்தான் குவிகிறது.

ம. பொ. சி.: பத்திரிகைகள் இலாபமான தொழில் என்பதறிந்து பல சீமான்களே அங்கு பத்திரிகைச் சொந்தக்காரர்களாகி உள்ளனர்— ஒரு சீமான் பல பத்திரிகைகளை நடத்துகிருர் சீமையில்—அமெரிக்காவில்.

அண்ணு: ஏன் இங்கே மட்டுமென்ன, நமது நாட்டிலும் முதலாளிகள் பல தொழில்களிலே பத்திரிகைத் தொழிலும் ஒன்று என்று கண்டுகொண்டார்கள். இலாப ருசி—அவர்களைப் பத்திரிகைத் தொழிலிலேயேயும் கொண்டுவந்து விட்டது.

ம. பொ. சி.: ஆமாம். லாபம், வெண்ணை விற்றுச் சம்பாதித்தாலென்ன, சுண்ணும்பு விற்றுச் சம்பாதித்தாலென்ன? லாபம் லாபந்தானே?

அண்ணு: பொது மக்களுக்கான பணி—அறிவு பரப்பும் அரும்பணி— குடி அரசுக்குத் தேவையான திருப்பணி—என்றெல்லாம் எண்ணி அல்ல. இதிலேயும் தந்திரமான வியாபார முறையைக் கையாண்டு, பத்திரிகையை நேரமும் நோக்கமும் அறிந்து நேர்த்தியான வகையிலே வெளியிட்டு, மக்களின் சுவை எதைதில் செல்லும் என்பதைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளை அழகுற வெளியிட்டு, ஏராளமான இலாபம் பெறுவது; என்று, தொழில் நிபுணர்கள் திட்டமிட்டு வேலை செய்கிருர்கள்.

ம. பொ. சி: உண்மைதான். இலாபம் பண அளவோடு மட்டுமல்ல. செல்வமும் சேருகிறது. செல்வாக்கும் பெருகுகிறது.

அண்ணு: ஆமாம். அதிகச் சிரமமில்லாமலேயே கூட. முதல்போடுகிருன் ஆலை அரசன். தொழிலாளியின்

திறமையினாலும், சிரமத்தினாலும் ஆடையின் தரம் உயருகிறது. மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். ஏராளமாக நாட்டிலே பரவுகிறது. இலாபம் குவிகிறது. ஆலை அரசர்களுக்கு! அது போலவே செய்திகளைத் திரட்டுவதில் நிபுணர்கள்—செய்திகளைச் சுவைப்படுத்தும் நிபுணர்கள்—இலக்கிய நடை எழுதுவோர்—கனல் கக்கிகள்-புயல்வரச் செய்வோர்—என்ற பல வித எழுத்தாளர்களையும், அவரவர் திறமைக்குத் தக்கபடி எழுத—வைத்து-இலாபம் திரட்டுகிறார் பத்திரிகைத்தொழில் அதிபர்! ஆலைத்தொழிலாளிக்கு ஆறணா என்றால், இவருக்குச் சற்று அதிகம் கிடைக்கும். அவ்வளவுதானே வித்தியாசம்?

ம. பொ. சி. தொழில் நிபுணர்களின் நோக்கமும், முறையும், நீங்கள் கூறுவது போலத்தான். அப்படிப் பட்டவர்களேயா பத்திரிகை நடத்துபவர்கள்? துவக்கப்படும் பத்திரிகைகள் எல்லாம் இந்த முறையிலே, இலாபம் திரட்டும் சாதனங்களாகவே அமைந்து விடுகின்றனவா?

அண்ணா: அப்படியல்ல. மரம் பழுத்தால் வௌவால் வரும் என்பார்களல்லவா? முதலாளிகள், பத்திரிகைத் தொழில் துறையின் பக்கம் பார்வையைச் செலுத்துகிறார்கள் இப்போது—இதிலிருந்தும் மரம் பழுக்கிறது என்று யூகிக்கவேண்டியதுதானே? இலாபகரமான தொழிலாகிறது என்று தானே பொருள்!

ம. பொ. சி: நடைமுறைச் செலவுக்கே திண்டாட்டமாகி பத்திரிகையின் உருவம் இளைத்து, நடத்துபவரின் உள்ளம் ஒடிந்து போவதையும் பார்க்கிறோமே!

அண்ணா: அனுபவ பூர்வமாகவே பார்க்கிறோம். உரிமையாளர், ஆசிரியர், நிருபர், தவறு திருத்துவோர், மானேஜர், கிளார்க் சகலமும் ஒருருவில் கூடியவர்களின் கதை. தாங்கள் கூறுவதில் இலாபம் கிடைக்காது. தொல்லைதான் அதிகம். அத்தகைய இதழ்களுக்கு ஆயுள் வளராது.

ம. பொ. சி: அதைத்தான் குறிப்பிடுகிறேன். இங்கிலையில் ஏராளமான பத்திரிகைகள் உள்ளனவே எனினும், தொல்லைகளைப் பொருட்படுத்தாமல், சலிப்புடன் மல்லுக்கு நின்று, சதா சிரமப்பட்டுக்கொண்டு அவ்விதமான பத்திரிகைகளை நடத்துகிறார்களே. வேறு தொழில் இல்லையா நாட்டில் — அவர்களுக்கு வேறு தொழில் தெரியாதா? தெரிந்துகொள்ள முடியாதா? முடியுமே! சுலபத்தில் இருந்தும், இலாபம் இல்லாத நிலையிலும், பத்திரிகையை நடத்திக் கொண்டுதானே வருகிறார்கள். பொது சேவை செய்கிறோம் என்ற எண்ணந்தானே? ஆர்வந்தானே, இதற்குக் காரணம்?

அண்ணா: ஆர்வந்தான்; தங்கள் சக்திக்கு மேற்பட்டது என்றாலும் சலிப்படையாது, பணி புரிய வைக்கிறது.

ம. பொ. சி.: இந்த ஆர்வம் பொதுச் சேவையாளரின் பண்பல்லவா?

அண்ணா: ஆமாம். அப்படிப்பட்ட பத்திரிகைகள் பொது சேவைதான் சொந்தத் தொழிலல்ல, சுகவாச வழியல்ல.

ம. பொ. சி.: அப்படிப்பட்ட பத்திரிகைகள்தானே நாட்டில் அதிகம்? பத்திரிகைத் தொழில், பொதுச் சேவை என்பது தானே இதிலிருந்து ஏற்படுகிறது?

அண்ணா: உண்மைதான். ஆனால் நான் குறிப்பிட்டபடி, நடத்துபவர்களைச் சீமான்களாக்கி வைக்கும் பத்திரிகைகளும் பல உள்ளனவே.

ம. பொ. சி.: அவைகளைக் கவனிக்கும் போது பத்திரிகைத் தொழில், சொந்தத் தொழில் என்றுதான் ஏற்படுகிறது.

அண்ணு: பொதுவாக ஒரு பாகு பாடு செய்யலாம். வெறும் செய்திகளைப் பண்டமாக்கும் பத்திரிகைகள். நடத்துபவரின் திறமை, தொழில், நிபுணத்துவம் ஆகியவற்றின் பயனுக, இலாபம் தரும் தொழிலாக வளர்ந்து விட முடியும். கருத்துக்களைப் பரப்பும் ஏடுகள் விஷயத்தில் அவ்விதம் சொல்லிவிடமுடியும்.

ம. பொ. சி.: அதிலும் எதிர் நீச்சாடுவது போல, பொது மக்களின் நம்பிக்கைகளைத் குலுக்கி விடக் கூடியதுமான கருத்துக்களை கொண்ட பத்திரிகைகள் லாபத் தொழிலாக வளர முடியாது.........

(தொடரும்)

டோஸ் நெ. 1.

ஒரு பொதுநல காங்கிரஸ் தோழர் நமது ஆசிரியருக்கு கடந்த பல ஆண்டுகளாக தொல்லை கொடுத்துக் கொண்டே வருகிருர். அதன் விளக்கம் அடுத்த முரசில் கேள்வியும்—பதிலும் என்ற தலைப்பில் வெளிவரும்.

மேன்மையான 100, 80 நெ. நூல் சேலைகளுக்கு சிறந்த இடம் மொத்த வியாபாரிகளுக்கு

சி. வெ. வே. வெங்கிடராம செட்டியார்,

ஜவுளி வியாபாரம்,

264, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

நாணயத்திற்கும், குறைந்த விலைக்கும் பெயர் பெற்ற இடம் இதுவே.

சங்கீதத்தைப் பற்றி

சக்கரவர்த்தியாரின் சாகசம்

அறிஞர். கஜேந்திரன் B. A.

மக்கள் பட்டினியால் வாடும் போது, அரிசிச் சுவடியே அறியாமல் நாட்டு மாந்தரில் அநேகர் அவதியுறும்போது, ஒரு சிறு கூட்டம் பெருங்கூட்ட மக்களை சுரண்டிக் கொண்டிருப்பது ஒழியாதிருக்கும் போது, இசை, கூத்து, சங்கீதம், சாகித்யம் ஆகியவற்றைப் பற்றிக் கவலை கொண்டுள்ளார் சில மனிதர். அவருள், நமது நாட்டைச் சேர்ந்தவரும், இப்போது வெளி மாகாணங்களில் பல இடங்களில் பல பொறுப்பான பதவிகளில் அமர்ந்து, அடிக்கடி பிரசங்கங்கள் செய்துகொண்டும், அறிக்கைகள் விடுத்துக்கொண்டும் உல்லாச வாழ்வு நடத்துபவருமான தோழர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார்.

கல்கத்தாவில், செப்டம்பர் 20-ம் நாளன்று அ. இ. சங்கீத மாநாட்டின் சுதந்திர விழா கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் கூறியதாவது (பஞ்சத்தாலும், வகுப்புத் துவேஷத்தாலும், மிருகத்தனமான செய்கைகளாலும் பங்கமடைந்த வங்கத்தின் முதன்மை நகரம் கல்கத்தா; கல்கத்தா இப்பொழுது மேற்கு வங்காளத்தின் தலைநகர் என்பதை வாசகர்கள் மறந்து விடக்கூடாது):-

"மனிதனின் பண்பை கடவுள் தன்மையின் உன்னதத்திற்கு உயர்த்துவதில் சங்கீதத்தை விட வலிமையானது எதுவுமில்லை"

"வீடுதோறும் இசை முழங்குமானால் தேசத்தில் உள்ள தீயவிஷங்களில் பல மறைந்து விடும். ஏனெனில் இன்பக்கருவியாக இசை இருப்பதோடு மனிதனிடமுள்ள விஷத்தன்மையைக் களையும் தெய்வீக மருந்தாகவும் விளங்குகிறது. மக்களிடையே அமைதியைப் பரப்பும் வேலையில் சங்கீதத்துக்குப் பெரும் பங்கு உண்டு. மனித இன்பத்திற்காக நாட்டில் மேன்மேலும் இசைப்பள்ளிகளை அமைக்கவேண்டும்" இப்படியாக இந்தியாவில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களாலும், உண்டான உணவுப் பஞ்சத்தாலும் மிகுதியாகப் பாதிக்கப்பட்ட வங்காளத்தைப் புனருத்தாரணம் செய்ய அனுப்பப்பட்ட உதார புருஷர் வெளுத்துவாங்கியிருக்கிறார்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்", "தினமணி" ஆகிய வடநாட்டு சுரண்டும் கும்பலின் தப்பட்டைகளின் செப்டம்பர் 22-ம்தேதி (வெளியூர் பதிப்பு) இதழ்களில் பிரமாதப்படுத்தப்பட்டு மேற்படி கருத்துரைகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பாடகரின் கழுத்து நெளிவுகளையும், சாரீர சாமர்த்தியத்தையும் நாடோறும் கண்டுகொண்டே இருந்தால் பசிக்கொடுமை பறந்து விடுமா, அல்லது தெய்வீகத் தன்மை பொருந்திய விஷத்தன்மையை

களையும் மருந்துதான் உற்பத்தி யாகிவிடுமா? நாட்டியக்காரரின் அங்க அவலட்சணங்களைப் பார்த்துக்கொண்டும், இசைகளிலெல்லாம் சிறந்த தமிழ் இசையை நுகர்ந்துகொண்டும் இருப்பதால், உலகிலேயே மிக மிக பிற்போக்கான நிலையிலுள்ள நமது நாடு விஞ்ஞான வேகத்தில் தொழில் முன்னேற்றத்தில் மற்ற நாடுகளை மிஞ்சிவிடுமா?

ஒரு சங்கீதக் கச்சேரி நடைபெற இருப்பதாக வைத்துக்கொள்வோம் மாலை 6 மணிக்கு ஒருபிரபல பாடகர், அதுவும் பெண் பாடகர் பாடுவதாக நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்தால், நண்பகல் 12 மணி முதற்கொண்டே உண்மையாகவே இசையில் பயிற்சியுள்ளோரும், இசை இன்னது என்றே அறியாதபெரும்பாலானவரும் இசை நடைபெற வேண்டிய மன்றம் நோக்கி விரைந்து சென்ற விண்ணம் இருப்பர். ஙறைய பொருள் கொடுத்து முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு சீட்டு வாங்க சக்தியற்றோர் கடைசி வகுப்பிற்கே நுழைவர். சில சமயங்களில் சீட்டு விற்கப்பட்டிருக்கும். இல்லையேல் சங்கீதக் கச்சேரி ஆரம்பிப்பதற்கு ஒரு மணி, இரண்டு மணி முன்னதாகத்தான் சீட்டுக்கொடுப்பார். அப்பொழுது பார்க்க வேண்டுமே மக்கள் கூட்டத்தையும், போலீசார் கலாட்டாவையும் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தனவந்தரின் அல்லது சங்கீத சபா காரியதரிசியின் தர்பாரையும்! எல்லாம் ஒருவிதமாக முடிந்து, இசை தொடங்கப்படுகிறது. என்று வைத்துக்கொள்வோம். கூட்டத்தில் எள் போட்டால் கீழே விழ முடியாத அளவு ஒருவர் தலைமேல் மற்றவர் உட்கார்ந்து கொண்டும், மற்றவர் தோளை வேறொருவர் சோபாவாக நினைத்துக் கொண்டு சாய்ந்து கொண்டும், வாய்களெல்லாம் திறந்தவண்ணம், ஈயோ, எறும்போ உள்ளே புகுந்தால் அதையும் சுவாஹா செய்து கொண்டும், ஜனங்கள் இசையரங்கினை நோக்கியவண்ணமே அமர்ந்திருப்பர்.

பாடகர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. காதுகளில் விலையுயர்ந்த கடுக்கன், கையிலே மிக விலை மதிப்பான கடியாரம், அதனை அணிசெய்துகொண்டுவேலைப்பாடமைந்த 4 சவரன் கெட்டிச் சங்கிலி அல்லது கண்களைப் பறிக்கும் 'டால்' அடிக்கும்கற்கள்பொறிக்கப்பெற்ற சங்கிலி, பத்து விரல்களில் கணக்கற்ற மோதிரங்கள், கழுத்திலே ஒரு உருத்திராட்சம், உடல் மீது ஒரு அருமையான சில்க்ஜிப்பா ஜிப்பாவிற்கு மேல் தோளின் மீது வெண்பட்டு, மேல் துண்டு, நெற்றியிலே அரையணு அகலம் குங்குமப் பொட்டு, இத்யாதி, இத்யாதி— அலங்காரங்களுடனும், பரிவாரங்களுடனும் வந்தமர்வார் பாடகர் சிரித்த முகத்தோடு.

உலகத்திலே எந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களாக இருந்தாலும் எந்த நேரத்திலும், எந்த ஒருதுறையிலும் முன்னேற்றத்தைக் காண்பது மக்களுக்குப் பயன்படாதவற்றைமாய்ப்பது என்பதுவே 20-ம் நூற்றாண்டின் குறிக்கோளாக இருக்கிறது, ஆனால் நமது நாட்டுப்பாடகரோ சிவப்பேறிய நாக்கையும், புகையிலை நிறமேறிய பற்களையும் முன் வரிசையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் வெந்தைத்தின்று ஜீரணிக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் உல்லா சப்பிரியர்களுக்கு. ஹம்சதுாளிகா மஞ்ச வீரர்களுக்கு, காட்டிக்கொண்டு, தொண்டையின் மீது தமது கையால் தாள வரிசை தப்பாமல் தட்டிக்கொண்டு, மனித அறிவிற்கே எட்டாத இல்லாத ஒரு கடவுள் எங்கு இல்லாமல் போய் விடுவாரோ என்ற பயத்தி

னால் தான் என்னவோ ஒரு பஜனைப்பாடல் பாடுவார், இல்லை சங்கீத வித்துவான் கத்துவார். நமக்கும், நமது அன்றாட வாழ்க்கைக்கும் கொஞ்சமேனும் சம்பந்தமற்றிருக்கும் ஒருவஸ்துவைப் பற்றி தமிழில் பாடினாலென்ன, தெலுங்கில் பாடினாலென்ன, கிரேக்க மொழியில், பிரஞ்சுமொழியில். லத்தீன் மொழியில், நீக்ரோக்கள் பாஷையில் பாடினாலென்ன. ஏதோ இரண்டு மூன்று மணி நேரம் அழுது தீர்ப்பார். இசை பாடுபவர் பெண்மணியாக இருந்தால் ஷோக் நடையுடனும், சுழல் கண்ணுடனும் மேடை மீது வந்து ஒன்றுமறியா அப்பாவிபோலமுன் வரிசை சீமான்களுக்கு மட்டும் ஒரு வணக்கம் செலுத்திவிட்டு, சிறு நகையுடன் அமர்ந்து 'சித்திவிநாயகனே' என்று அலறுவார். பாடகரில் ஆண், பெண் என்ற வித்தியாசம்தானே தவிர, பெண் பாடும்பொழுது உல்லாசப் பிரியர்கள் கொஞ்சம் தலையைப் பலமாக ஆட்டுவார்கள் என்பதைத் தவிர, சூழ்நிலையிலாகட்டும் வித்தியாசம் முன்னேற்றத்துறையில் காண்டல் அரிது.

எனவே தோழர் சர்க்கரவர்த்தி ராஜகோபாலாச்சார்யார் கூறுவது அதாவது 'மனிதனின் பண்பை கடவுள் தன்மையின் உன்னதத்திற்கு உயர்த்துவது சங்கீதம்', 'மக்களிடையே அமைதியைப் பரப்பும் கருவி சங்கீதம்' என்பதெல்லாம் வடிகட்டிய பொய்யாகின்றது.

ஆகஸ்டு பதினைந்து அன்று தெருவெல்லாம் சங்கீதம் முழக்கினர்,

ஆடுவோமே - பள்ளுப்பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று
(ஆடு)
எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பது
உறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி
யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்
தோதுவோமே
(ஆடு)

நமக்கு இன்று கிடைத்திருப்பது சுதந்திரமா? மக்கள் ஆனந்த சுதந்திர சாகரத்திலா மிதக்கினர்? எல்லோரும் சமம் என்பது உறுதியாகிவிட்டதா? ஒரு சிறு கூட்டம் மற்ற எல்லா மக்களையும் சுரண்டிக்கொண்டிருப்பது — அடக்கி ஆள்வது உண்மையான உறுதியான வெற்றியாகிவிடுமா? சிறு கூட்டத்தின் நயவஞ்சகத் தன்மையை வெற்றிபெறக் கொள்ளல் முறையானதா, நேர்மையானதா? தரணிக்கெலாம் எடுத்து எதை ஓதுவது? இங்குள்ள ஜாதி வித்தியாசங்களை எடுத்து ஓதுவதாயின், பிறநாட்டார் எள்ளி நகையாடமாட்டாரா? இங்குள்ள வகுப்புப் பூசல், துவேஷம், கலவரம் பிறநாட்டும்க்களுக்குக் கூறுவதானால் அவர்கள் இந்நாட்டு மக்களைப்பற்றி உயர்வான சிறப்பான கருத்தா கொள்வர்? சங்கு கொண்டு எதை ஊதுவது? 'வெற்றி பெற்றுவிட்டோம்', ஆனந்த சுதந்திரமும் அடைந்துவிட்டோம்', 'எல்லோரும சமம்' என்பவற்றை தத்துவார்த்தமாகக் கொண்டு சங்கு ஊதுவது அயோக்கியத் தனமல்லவா? 'சிவசம்போ சங்கர்' என்றலறிக்கொண்டு சங்கு முழக்கும் திருட்டுச் சாமியார்களுக்கும், ஒரு உயர் நாட்டின் நன்மக்களுக்கும் வித்தியாசமில்லையா?

இசைப்பள்ளிகளை அமைத்துவிடுவதாலோ, அல்லது சங்கீதத்தை மிகுதியும் பிரபல்யப்படுத்துதலாலோ, கடவுள் தன்மை மிக்க இசை வீடுதோறும் முழங்குவதாலோ, மனிதனின் பண்பு

உயர்ந்துவிடாது; தேசத்தில் உள்ள தீய விஷயங்கள் மறைந்துவிடா; விஷத்தன்மையை களையும் தெய்வீக மருந்து ஏற்பட்டுவிடாது; மக்களிடையே அமைதியும் தோன்றிடாது.

கற்பனைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதை விட, தோழர் ராஜாஜி, அவர் தாம் வகிக்கும் இன்றைய பதவியை பாதுகாத்தற் பொருட்டாவது, மக்கள் வாழ்க்கை உயர்வில், மக்கள் பசிக் கொடுமையை யகற்றி சுகமாக வாழவேண்டுமென்பதில் கவனஞ் செலுத்துவாராக!

(சென்ற ஆண்டு மேற்கு வங்கக் கவர்னராய் இருந்தபோது சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் செய்த பிரசங்கத்தைப் பற்றி கண்டனம் மேலே தீட்டியிருப்பது)

உலகப் பொதுச்சொத்து.

(சக்திக்கனல்)

பட்டினியால் வாடிப் பதைத்தான் அமரகவி
எட்டிநின்றார் மக்கள் இருதயத்தி லீரமின்றி
துக்கம் பெருகித் துடித்தகவி செந்தணலைக்
கக்கும் கவிதைகளைக் காற்றில் மிதக்கவிட்டான்!
மக்களன்று வாழ்ந்த மதிகெட்ட வாழ்க்கையினை
நோக்கி நெருக்கவென நொடியில் முழக்கமிட்டான்!
திக்குச் செவிடுபட ஜெயமுரசு கொட்டினான்
உக்கிரத்தின் வேகம் உலகை எழுப்பிவிடவே
பாடினான் பாட்டை பணக்காரச் சாமியெலாம்
பாடும் கவியவனைப் பணத்துக்கு வாங்கிவிட்டார்-!
உலகப் பொதுச்சொத்தை ஊனில்உயி ராங்கவியை
கலகத் திடையினிலே கட்டிவைக்கப் பார்ப்போமோ?
நாட்டின் விடுதலையை நாம்பெற்றும் நம்கவிஞன்
பாட்டின் விடுதலையைப் பற்ற திருப்போமோ?
வீரத்தமிழா! வெற்றிக் தலைவிளக்கே!!
வீறுபடைப்பாய், விலங்குடைக்க வந்திடுவாய்!!



பாச வலை

1. கானமுகி பேசுகிறாள்.

ஆசிரியை
S.P.மீனாட்சி அம்மாள்

சிற்றன்னையால் —(தாய்கூடப் பிறந்த தங்கையினாலல்ல) — வளர்க்கப்பட்டவள் நான் மழைமேகம் காணாப்பயிர்போல மாற்றாந்தாய் என்னைக் கொடூரமாக நடத்தும்போதெல்லாம் என் தந்தை மாற்றாந்தாயின் முகத்திற்கு மறைவாக இருந்து காய்ச்சிய இரும்பில் பட்ட எண்ணெயபோல கொதிப்பார். என் தந்தை அவளின் பிரேமா விலாசத்தில் மூழ்கிக் கிடந்ததால் சுயேச்சையாக எதையும் செய்ய சக்தியற்றவராயிருந்தார் கூண்டுக் கிளிபோல. எனக்கு நினைவு தெரிந்தநாள் முதல் ஒருநாளேனும் என் மாற்றாந்தாயால் நான் இன்பமாக நடத்தப் பட்டவளல்ல. அதனால் என் கண்கள் எப்பொழுதும் நீரலைகளைத் தாங்கியே நிற்கும் வற்றாத நீர் தேங்கிய ஏரிபோல பயன்படாது இரும்புப்பெட்டியில் பதுங்கிக் கிடக்கும் பணம் போல, எவர்க்கும் பயன்படாதபடி நானும் சதாச் சுவர்களால்

சூழப்பட்ட என் வீட்டில் பதுங்கிக் கிடந்தேன்.

கோடையிடியின் வல்லோசையைக்கேட்டு அஞ்சும் நாகம்போல நானும் என் மாற்றாந்தாயின் ஆக்ஞைகேட்டு பயந்து நாளையும் பொழுதையும் கழித்து வந்தேன். பாலைவனத்தில் நீண்ட தூரத்தில் அபூர்வமாகக் காணப்படும்ஓசையைப் போல என் தந்தை என்னைப் பள்ளிக்கனுப்பும் விஷயத்திம் மட்டும் என் சிற்றன்னைக்கு எதிர் மாறாக நடந்து எனவாழ்வு முற்றிலுமே வற்றிப்போகாதபடி பாதுகாத்தார் நல்லிருளில்வானத்தில் விடிவெள்ளியை மட்டும் மூடாது மற்ற பாகங்களையெல்லாம் தனது கரும் போர்வையால் மூடிய மேகம் போல கல்வியடையும் பேற்றைத்தவிர மற்ற எப்பயனையும் என்வாழ்வு எட்டிப்பிடித்தது கிடையாது. விரல் பட்டவுடன் வீணை தந்தி நாதம் தருவதுபோல நான் சகிக்க முடியாத வேதனையிலாழ்ந்த போதெல்லாம் இலக்கியங்கள் தான் எனக்கு ஆறுதல் தரும் அன்பராகயிருந்தது.

வீட்டிருளை அகற்ற அகல் விளக்கைத் தூண்டிவிடுவது போல துன்பம் பெருகப் பெருக என் அறிவும் அனுபவமும் புதிய ஜோதியுடன் பிரகாசித்தது. பழுப்பிலைகள் ஒவ்வொன்றாக உதிர்வது போல பல வருடங்கள் இடையில்ஒவ்வொன்றாக உதிர்ந்தன. புண்ணை வெளிக்காட்டாமல் மறைத்துப் பாதுகாக்கும் புதுத் துணி கட்டுப்போல என் தாய் எனக்குததரும் எந்தக் கஷ்டத்தையும் உள்ளடக்கி வெளிக்காட்டாமல் மறைத்தேன். உழுவாரற்ற நிலம் போல அன்றிருந்தேன். மணியில் மறைந்திருக்கும் ஒலி அடித்தவுடன் நாதத்தை எங்கும் அள்ளித் தெளிப்பதுபோல் எனக்குப் பெண்மைப் பருவம் கனிந்தவுடன் புதுவாழ்வு பெற ஒரு இன்ப உணர்ச்சி என் இதயத்தில் பிதுங்கித் தவழ்ந்தது.

கொட்டிலில் கட்டுத்தறியில் கிடந்த பசுகட்டவிழ்த்துஓடவிழைவதுபோல என் மனோ சக்தி ஆணழகன் ஒருவன் மேல்பாய்ந்தது. மாலுமியில்லா மரக்கலம் போல என்னுள்ளம் ஓயாது தத்தளித்தது. ஏகாதிபத்தியத்தின் அவசர அடிமைச் சட்டங்களுக்குப் பணியாத அரசியல் வாதிபோல என் வீட்டுச் சட்டத்திற்கு முடிதாழ எனக்கு விருப்பமில்லை. மத்தாலே உறைத்தயிர் உடைவது போல என் வீட்டாரின் எண்ணத்தாலே என்னடக்கம் உடைந்துவிட்டது.

எவ்வண்டுக்கும் தளர்ந்து வளையும் பூச்செடி போன்ற தாசி குலத்தில் பிறந்தவள் நான் வேள் சிலைக்கு வள்ளிச்சிலை இருப்பதைப்போல ஒருவனுக்கே ஒருத்தியாக்க வேண்டுமென்பதை என் சிற்றன்னை விரும்பவில்லை. பாசிபற்றிய தடாகம்போன்ற பாழான கருத்துக்கொண்ட சமூகத்தில் பிறந்தவள் நான் ஊசிமுனையில் ஏறாத இரும்பைப்போல என் நெஞ்சுள்ளதை என்பெற்றோர்கள் அறியார் கன்றைப் பிரிந்த பசுவினைப்போல் என்னைப் பிரிந்து ஒருவர் வாழ்கின்றார்.

(தொடரும்)

புயல்காற்று

ஆரம்பத்தில் அடாணு...............

புயல்

கேசரி என்று எண்ணியிருந்தோர் கிட்ட நெருங்கிப்பார்த்தும் வேசரியானதைக் கண்டு அச்சமுற்றனர். கத்தும் கத்துபத்தையா கர்ஜிக்கும் சிங்கமென ஐயுற்றோம் என தன் மயக்கும் மனதைத் தேற்றிக்கொண்டனர். சிங்கத்தின் போர்வையை யிழுத்துப்போர்த்திய இந்த ஈனமிருகத்தை இவ்வேளை வரை அரிமா என எண்ணினோமே! தொலை காட்சியை நம் கண்கள் காண சக்தியற்றவாயினவே ! என வருந்தினார் கழுதையிடம் நெருங்கிய அன்பர்கள். காண்டிபம் பத்திரிகையைக் காதலித்தவர்கள் குருக்ஷேத்திர எழுத்துக் கர்த்தாவை 24—9—48ந்தேதியிதழை படித்ததிலிருந்து முன்னம் நாம் கூறிய விளக்கத்தை ஒத்ததென கூசாமல் எண்ணுவர்.

ஸ்ரீ நாயக்கருச்கு அர்த்தம் தெரியுமா? நாயக்கரைத் திட்டவேண்டுமென்றவொரேநோக்கத்திற்காகதனது சொத்தைக் காண்டிபக் கணையைத் தீட்டிவைத்தவர்களில் தலை சிறந்தவர் குருக்ஷேத்திர எழுத்துப்பூமான் ஜின்னாவுக்கு வால் பிடித்ததில் நாய்க்கரைவிட ராஜாஜி சிறந்தவர். ராஜாஜியைத் திட்டி காமராஜரின் வால் பிடித்த காலத்தை இன்று மறந்து குருக்ஷேத்திரக்காரர் ராஜாஜியின் அடிவருடி முடிசாய்ந்துநிற்கும்பண்பாளரென்பதை நாடறியும் வகுப்புத்துவேஷம் வேண்டாமெனக்கூறி எழுதிய குருக்ஷேத்திரக்காரர்கோட்ஸேயாக முஸ்லிம் மக்கள் சம்பந்தப்பட்ட வரையில் மாறுகிறார். கட்சி நோக்கமோ கொள்கைக்கு அர்த்தமோ புரிந்துகொள்ள முடியாத இந்த புத்திமான் ஸ்ரீ நாயக்கருக்கு அர்த்தம் தெரியாதெனக் கூறுவதைக் கண்டு அவருக்கு மூளைக் கோளாறு என்றுதான் எவரும் எண்ணுவர்.

"காந்தியார் இறந்தபின் இந்துஸ்தான் நாதியற்ற காட்டுமிராண்டி நாடானதுபோல் பாகிஸ்தான் ஜின்னாமறைவால் அந்த நிலை அடையாது" என்று பெரியார் எழுதியதில் குருக்ஷேத்திரக்காரருக்கு கும்பியிலுள்ள ரத்தம் தலைக்கேறி தலைகால் தெரியாமல் எழுதுகிறார். காந்தியார் இறந்தபின் உண்மையிலே இந்த நாடு நாதியற்றுப்போயிற்று. காட்டுமிராண்டி நாடாயிற்று. இதில் தவறேதுமில்லை. பரத்துவாஜ் போன்ற தலைவர்களுக்கு செய்த கொடுமை! மாறுபட்ட கட்சிக்காரர்களிடம், கருத்து வேற்றுமையுடையவர்களிடம் செய்த தீமை!! தொழிலாளர்களுக்கு செய்த துரோகம்!!! ஆசிரியர்களுக்கு கொடுத்த அவதி

N.G.O. க்களுக்குத் தந்த இன்னல். பத்திரிகாசிரியர்களுக்கு மொரார்ஜி தேசாய் போன்ற மாகாணப் பிரதமர்கள் தந்த பரிசு!! இவையெல்லாம் காட்டுமிராண்டித்தனமல்ல. காண்டிபக்காரர் கதைப்பது எதன் பொருட்டோ? முஸ்லீம்களைத் திட்ட வாய்ப்புக் கிடைக்காததினாலோ அல்லது இந்தி எதிர்ப்பாளர்களைத் திட்டி எழுத்துக்களை உருவாக்க இயலாததினாலோ நாயக்கர் கூறிய வார்த்தைகளை அர்த்தம் தெரியாதபடி காண்டிபக்காரர் பல்டியடிக்கிறார், நமக்கொரு நினைவு மலர்கிறது இத்தருணத்தில்.

சங்கீத வித்வான் முதன்முதலிலே அடாணா ராகத்தை கமபீரமாக கனகச்சித பக்கமேளத்துடன் ஆலாபனம் செய்வார்; பாட்டு முடிவு சமயத்தில் வசூலில்லை சங்கீதத் கொட்டகையில் என்று கேள்விப்பட்ட வித்வான் தாளத்தையும், சுதியையும் மறந்து முகாரியில் பாடுவதைக் கேட்ட ரசிகர்கள் வித்வானைத் திட்டி கலகம் விளைவித்து கொட்டகையை விட்டு நகர்ந்துசெல்லும் பல கச்சேரிகளை நாம் கண்டிருக்கிறோம். அதுபோல அன்று இந்தி எதிர்ப்பு இயக்கத்தைப் பொசுக்கிவிடுவோமென அடாணாராகத்தில் பாடிய அதே ஆச்சாரியார் முகாரி ராகத்தில் பாடித் தோல்வியடைந்து ஏளனத்திற்கு ஆளானது கொட்டகைச் சம்பவமல்ல, சரித்திரக் குறிப்பாகும்.

அதை இந்தப் பூந்தமல்லி ரஸ்தா தம்பி அறியாது நாயக்கருக்கு அர்த்தம் தெரியுமா? எனக் கேட்பதைக் கண்டு கைகொட்டி நகைப்பதைத் தவிர வேறெதுவும் எழுதவோ சொல்லவோ நாம் விரும்பவில்லை. ஆரம்ப அடாணா ராகம் முடிவிலே முகாரியாகுமென்பதை நாம் மட்டுமல்ல, நாட்டாருமறிவர், தோழர்களுக்கு தொல்லையைக் குறைக்க புத்தி கூறு முன்னர் தன் புத்தியைத் தீட்டிக் கொண்டால்தான் காண்டிபக்காரர் குருக்ஷேத்திரத்திலிறங்கத் தகுதியுடையவராவார்.

அறிவிப்பு.

அடுத்த முரசு டிசம்பரில் வெளிவராது.
ஜனவரியில், பொங்கல் மலராக அதிக பக்கங்களுடன்
வெளிவரும். வணக்கம்.

PHONE: 3202.
M.C. APPASAWMY CHETTY & CO.
TRI-COLOUR. HALF-TONE & LINE BLOCK MAKERS.
14, JONES ST, MANNADY, MADRAS.

கோவையில்

புதிய ஜவுளிக்கடை

V. K. & Bro,

CLOTH SHOP,

RAJA ST., COIMBATORE.

உயர்ந்த ரக பட்டு & நூல் ஜவுளி
தினுசுகள் குறைந்த விலையில்
வாங்க நம்பிக்கையான இடம்

ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை
விளங்கும்.

V. குமரப்ப செட்டியார் & Bro,
பட்டு ஜவுளி வியாபாரம்,
252, ராஜ வீதி, :: கோயமுத்தூர்.

குமரன் மில்ஸ்

லிமிடெட்,

புதுப்பாளையம்-மேட்டுப்பாளையம் ரோடு,

கோயமுத்தூர்.

★

நாங்கள் 36, 60, 80, நெம்பர் பாவு நூல்

தயாரிக்கிறோம்!

இந்திய மூலதனம்-நல்ல டிவிடெண்ட்,

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்த

நிர்வாகம்

★

G. V. முத்துசாமி B. Sc.

பார்ட்னர்,

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செகரட்ரீஸ்.

ஆசிரியர் மகாநாட்டில்

ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்கள்

சொற்பெருக்கு.

தாராபுரம் தாலூக்கா ஆசிரியர் மகாநாடு காங்கயத்தில் 29–8–48 தேதி நடைபெற்றது. அதில் நமது "கோவை முரசு" நிர்வாக ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்:–

மேன்மை தங்கிய தலைவர் அவர்களே! பெரியோர்களே! ஆசிரிய ஆசிரியைகளே! வணக்கம். இவண் குழுமியிருக்கும் பெருவாரியான ஆரம்ப ஆசிரியர்கள் அடங்கிய இம் மாபெரும் கூட்டத்தைக் கண்டவுடன் என் மனம் அளவிலா ஆனந்த வெள்ளத்தில் மூழ்குகிறது தோழர்களே!

நம்மிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டி, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே" என்ற வாக்கை மெய்ப்பிக்க வேண்டுகிறேன். அதுபோதுதான் நமது இழிநிலை, உயரமுடியும். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பதன் மதிப்பும் செல்வாக்கும் ஒரு காலத்தில் இருந்து வந்தது, உள்ளபடியே உண்மைதான். அதை உணர்ந்தேதான் அக்காலத்தில் ஆங்கிலத்திலும் "The Teachers Profession in the Noblest of all the Provissions" என்று கூசாமல் கூறியுள்ளார்கள். ஆனால் இன்றோ, எம்முறையில் அம்மதிப்பும், செல்வாக்கும் இருந்துவருகிறதென்பதை சற்று ஆராய்வோம். அரசாங்கத்தாராலும், பொதுமக்களாலும் ஒதுக்கப்பட்டு, தள்ளிவைக்கப்பட்டு, இழிவாக மதிக்கப்படும் நிலைமைக்கு நம் சமூகம் ஆனதிற்குக் காரணம் பொருளாதாரமே காரணமாகும். பொருளற்ற நம் சமூகத்தை மதிப்பார் யார்? ஒரு தொழிலாளி தினக்கூலி 3 ரூபாய் வீதம் மாதத்தில் 100 ரூபாய்வரை ஊதியம் அடைகின்றான். ஆனால் எதிர்கால சமுதாயத்தை சிருஷ்டிக்கும் ஆசிரியனுக்கு பாதிச் சம்பளம்கூட இல்லையே. சர்வ தேசியம் பேசுகின்ற

நமது சர்க்கார், நாட்டில் அறியாமை போகவேண்டும்என்று வாய்ப் பறையடிக்கும் நம் மதிமந்திரிமார்கள் கொடுக்கும் பரிசு ஆரம்ப ஆசிரியருக்கு பட்டினியே! ஆசிரியர்கள் குறை நீங்காவிடில் நாட்டின் சுகவாழ்வு ஸ்தம்பித்துவிடும் எதிர் கால மக்களை நல்ல வழியில் உருவாக்க முடியாது. இங்கிலாந்தில் கல்விக்காக ஒரு பிள்ளைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 52-8-0 வீதம் செலவு செய்கிறது. ரஷ்யா 100 ரூபாய் செலவு செய்கிறது. ஆனால் கேவலம் இந்த நாட்டில்தான், ஓர் ஆண்டுக்கு ஓர் குழந்தைக்கு 0-8-6 வீதம் செலவு செய்கிறது. சர்க்கார் ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளை கவனிக்காவிடில் பிறக்கும்பொழுதே யாவரும் ஆரம்ப ஆசிரியர்களாக பிறக்கப்படவில்லை என்பதையறிவார்கள். பெட்டிக் கடை வைத்தோ, மண்வெட்டி பிடித்தோ, கூலிவேலை செய்தோ, தினம் 3 ரூபாய் சம்பாதிக்கலாம் என்பதை அறிவார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் என்று சொல்லிக்கொள்ள நாணப்படுகின்ற ஊதியமற்ற தொழிலில் இருப்பதைவிட வெளிவந்துவிடுவதே மேல். அப்பொழுதுதான் அரசாங்கமும், பொதுமக்களும் ஆசிரியர்களின் குறைகளை உணர்வார்கள். அரசாங்கம் நாட்டின் நலனைக்கருதி, எதிர்கால மக்களின் நலனைக் கருதி இன்றைய சிறுவர், சிறுமிகளின் க்ஷேமத்தைக் கருதி, உடனடியாக ஆசிரியர்களின் குறைகளைப் போக்குமாறு மீண்டும் ஒருமுறை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு பொதுமக்களின் ஆதரவையும் வேண்டிக் கொண்டு என் உறையை முடிக்கின்றேன்.

காந்தியடிகளின் தாய்மொழிப் பற்று.

கடவுளுடைய மொழியாக இருப்பினும் சரியே, அது தனது தாய்மொழிக்கு ஊறு விளைவிப்பதாய் இருப்பின், அதை ஒருவருமே படிக்கக்கூடாது. இந்தி மொழிமீது வெறிபிடித்து அலைபவர்களிடம் நான் தங்களை (காந்தியடிகளை) உதாரணமாக எடுத்துக்காட்டுவது வழக்கம். 'இந்தியாவின் பொது மொழி இந்திதான்" என்று தாங்கள் கூறிய போதிலும், தங்களுடைய சுய சரிதத்தையோ, தென்னுப்ரிக்கா சத்தியாக்கிரகத்தையோ, தாங்கள் இந்தியில் எழுதவில்லை; தங்கள் தாய்மொழியான குஜராத்தியில்தான் எழுதியிருக்கிறீர்கள்.!

காந்தியடிகளுக்கு வந்த கடிதம்.
(மொழிப் பிரச்னை பக்கம் 38)

வெற்றிகரமான 2-வது வாரம்

கோவை, சாரதா ஹாலில்

சீர்திருத்த நாடக சபையாரால்

நடிகவேள் M. R. ராதா நடிக்கும்

தூக்கு மேடை

★ உணர்ச்சி ததும்பும் நாடகம்

★ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நாடகம்

★ கலையுலகின் கவர்ச்சிமிக்க நாடகம்

காணத்தவறுதீர்கள்.

தயாராகிறது :

"ராஜா தேசிங்"

கதை, வசனம் :

K. தங்கராஜு திருவாரூர்.

கோவை ஜில்லா மோட்டார் தொழிலாளர் மகாநாடு.

ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்களின் சொற்பொழிவு

(கோவை U. M. S. சென்ட்ரல் ஸ்டேஷனில் 8–9–48ல் நடைபெற்றது.)

——o()o——

கனம் மந்திரி அவர்களே! தலைவர் அவர்களே! மோட்டார் தொழிலாளர்களே! பொதுமக்களே வணக்கம்.

என்னை இங்கு பேச விரும்பி வாய்ப்பளித்த மகாநாட்டு நிர்வாகிகளுக்கு மீண்டும் எனது வணக்கம். சென்ற சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற பல பொதுக்கூட்டங்களில் யாரை நீங்கள் குறைகூறினீர்களோ, அவர்களுடைய இடத்தில் இந்த மகாநாடு இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். முதலாளியும், தொழிலாளியும் ஒருமனப்பட்டு தங்களுடைய குறைகளை ஞாயமான வழியிலே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டுமே ஒழிய நாம் முதலாளிகளைத் தாக்கிப் பேசுவதனாலோ, குறைகூறுவதினாலோ யாதொரு நன்மையும் ஏற்படாதென்பது என் துணிவு. நீங்கள் இன்று ஓரளவுக்கு உங்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்பட்டுவிட்டது என்றுகூட துணிவாகக் கூறுவேன். நான் ஜில்லா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து மோட்டார் தொழிலாளர்களுக்கு மற்ற கம்பெனியார் கொடுக்கப்பட்டுவரும் சம்பளங்களைவிட தோழர் G. D. நாயுடு அவர்கள் கம்பெனியில் கொடுக்கப்பட்டுவரும் சம்பளம் மூன்றுமடங்கு அதிகம் என்பது எனக்குத் தெரியும். நீங்களும் உணர்வீர்கள். இதையாரும் மறுக்க முடியாது. அரசாங்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட (Award அவார்டு) சம்பளத்தின் திட்டப்படி திரு. நாயுடு அவர்கள் கொடுத்துவருவது மூன்று மடங்கு அதிகமாகும்.

திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் கம்பெனியானது ரஷ்யாவிலுள்ள தொழிலாளர் திட்டப்படி தொழிலாளர்களுக்கே அந்தக் கம்பெனியை சொந்தமாக்கிவிட்டாலும் விடுவார். காலப்போக்கில் அந்த மாறுதல் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறேன். அவரைவிட தொழிலாளர்களின் நலனைக் கருதக்கூடிய முதலாளி இந்தியாவிலேயே இல்லையெனக் கூட கூறலாம். அவ்வளவு சிறந்த பண்பு வாய்ந்தவர். அவரைப்போலவே மற்ற கம்பெனியார்களும் நடந்துகொள்வார்களேயானால் தொழிலாளர்களின் தொல்லையொழியுமென்று கூறலாம். ஆனல், மற்ற கம்பெனி முதலாளிகள் அரசாங்கத் தீர்ப்புப்படி உள்ள குறைந்த சம்பளத் திட்டப்படிகூட இன்னும் கொடுக்காமலிருந்து வருகிறார்கள் என்பது மிக வருந்தத்தக்கதே. அதனாலேதான் இதுபோன்ற மகாநாடுகளும், பொதுக்கூட்டங்களும், தொழிலாளர்கள் கிளர்ச்சியும் ஏற்படவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். மோட்டார் பஸ் சர்வீஸ் ஆனது, முதலாளி நலனைக் கருதியோ, தொழிலாளர்களின் நலனைக்கருதியோ நடத்தப்படுவதாக நீங்கள் கருதக்கூடாது. இது பொதுமக்களுடைய நலனைக்

கருதியே ஆரம்பிக்கப்பட்டதாகும். நான் தினம் ஒன்றுக்கு குறைந்தது மூன்று ரூபாய் பிரயாணச் சிலவு கொடுத்து பிரயாணம் செய்துவருகிறேன். பல கம்பெனிகளில் பஸ் சர்வீசில் நடைபெறும் ஊழல்கள் சொல்லிமுடியாதவை. அளவுக்கு மீறிய பிரயாணிகளை ஏற்றிச் செல்வது, அதிக கட்டணம் வசூலிப்பது டிக்கட்டுகள் (Black Market) பிளாக் மார்க்கட்டில் விற்பது இது போன்ற குற்றங்கள் ஏராளமாகச் செய்துவருகிறார்கள். இதன் காரணமாக பஸ் சர்வீஸ்களுக்கு அபராதம் விதித்தோ, சர்வீசை சஸ்பெண்ட் செய்தோ, இன்னும் அவர்கள் திருந்தியதாகத் தெரியவில்லை.

உங்களுடைய குறைகள் கஷ்டங்கள் எவ்வளவு நியாயமானதென்று நீங்கள் கருதுகிறீர்களோ, அது போலவே, பொது மக்களுடைய குறைகளையும் கஷ்டங்களையும் கேட்க, என்போன்றருக்கு உரிமையுண்டு. ஆகவே பொதுமக்களுடைய நலனைக் கருதி நீங்கள் சேவை செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இங்கு சிலர் பஸ் சர்வீஸ்களை தேசீய மயமாக்கவேண்டுமென்று பேசினார்கள். நான் கூறுகிறேன், பஸ் சர்வீஸ் தேசீயமயமாக்கப்பட்டால் உங்களுக்கு இன்றுள்ள நிலையில்கூட வாழ முடியாதென்று. நீங்கள் நினைக்கவில்லை. ஏன் அப்படி கூறுகிறேன் என்றால் மில் தொழிலாளர்களுக்கு சென்ற சில மாதங்களுக்கு முன் செய்த உதவியைப்போலத்தான் இருக்குமேயொழிய அதிக சலுகைகள் கிடைக்குமென்று நாம் நினைப்பது தவறு. சற்று அதிகமான நெருக்கடியான கட்டத்தில்தான் நாம் வாழமுடியுமே தவிர இன்றுள்ள நிலையில்கூட இருக்க இயலாது. எல்லாவிதமான தொழிலாளர்களுடைய கிளர்ச்சியை நசுக்க அரசாங்கம் உதவுகிறதென்று கூறலாம். ஆகவே நீங்கள் இன்று இங்கு நடைபெற்றதைப் போன்றே மற்ற முதலாளிகளிடத்திலும் உங்களுடைய குறைகளை எடுத்துக்கூறி ஞாயமான முறையிலே எல்லாவிதமான நலன்களையும் பெறவேண்டுமென்றுகூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். எல்லோருக்கும் எனது வணக்கம்.

★ ஸ்டார் ஸ்டுடியோ

கோயமுத்தூர்.

[Y. M. C. A. எதிர்புறம் மேல்மாடியில்]

உயரிய புகைப்படங்களுக்கும், புரோமைட் என்லார்ஜ்மெண்டுகளுக்கும் சினிமா சிலேடுகளுக்கும் உகந்த இடம். டெவலப்பிங், பிரிண்டிங், என்லார்ஜிங் முதலிய அமெச்சூர்களுக்கான வேலைகளும் செய்து கொடுக்கப்படும். விரைவாகவும் நேர்த்தியாகவும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

போட்டோ சாமான்களும் கிடைக்கும்.

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்.

Pro:- ராஜு.

லக்ஷ்மிகாந்தன்

(தோழன்)

கோவை சாரதா டிராமா ஹாலில் 29—9—48-ம்தேதி இரவு 9-30 மணிக்கு கோவை மாநகரத் தந்தை (City Father) திரு. C. S. இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் நடிகவேள் M. R. ராதா அவர்களின் சீர்திருத்த நாடக சபையாரால் லக்ஷ்மிகாந்தனென்னும் நாடகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

சுமார் 2000க்கு மேற்பட்ட ரசிகர்கள் குழுமியிருந்தனர். திரு. M. R. ராதா அவர்கள் தலைவரை வரவேற்று ஆற்றிய சொற்பெருக்கின் சுருக்கம்:—

தலைவர் அவர்களே! ரசிகப் பெருமக்களே! வணக்கம். நான் நாடகக் கலையில் சென்ற 9 ஆண்டுகளாக தனித்து நின்று பணியாற்றிக்கொண்டு வருகின்றேன். அன்று தொட்டிந்நாள்வரை நாட்டிற்கு எவ்வகையில் சீர்திருத்தம் தேவையென்பதை நன்குணர்ந்தபின்னே அவையெல்லாம் நாடகவாயிலாக நான் தொண்டாற்றியுள்ளேன். அதற்கு நானடைந்த பரிசு கல்லடி, சொல்லடி திரைப் படுதாக்களைத் தீயுண்ணக் கொடுத்தல் இவைதாம் நான்கண்ட பலன். தலைவரவர்களை இந்நாடகத்திற்கு தலைமை தாங்கி வெற்றியுடன் நடத்தித்தரும்படி நான் சென்று கேட்டதற்கு தலைவர் 5 நிமிஷந்தான் கொட்டகையிலிருப்பேனென்றார்கள். இப்பொழுது 50 நிமிஷங்கள்வரை நாடகத்தைக் கண்ணுற்றிருக்கிறார்கள். கண்ணுற்ற வரையில் தலைவரவர்களுடைய மேலான அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். அதற்கு அறிகுறியாக உங்கள் சார்பாகவும் எங்கள் கம்பெனியின் சார்பாகவும் இம்மாலையை அன்னாருக்கு அளிக்கிறேன்.

தலைமை தாங்கிய C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் பேசியதின் சாரம்:—

ரசிகர்களே! நடிகர் ராதா அவர்களே! 'சாரதாவிலாஸ்' கொட்டகையில் 30 ஆண்டுகட்கு முன்னர் இதே இடத்தில் சிலர் நாடகம் நடத்திக் கொண்டிருந்தனர். முனுசாமி நாயுடு, ராஜா கோவிந்தசாமி பிள்ளை V. P. ஜானகி, பைரவ சுந்தரம் பிள்ளை முதலியோர் நடித்த நாடகங்களை

அந்தக் காலத்தில் இந்த இடத்தில் நான் பார்த்திருக்கிறேன். ஆனல் இன்றும்தான் பார்க்கிறேன். இரண்டிற்கும் வேறுபாடுண்டு.

சில நாட்களுக்குமுன் T. K. S. சகோதரர்கள் தமது நாடகங்களை இவ்வூரிலே நடத்திக்கொண்டிருந்தனர். அவர்களும் பல புராண நாடகங்களைத்தான் நடித்தனர். ஆனல் இதுபோன்ற சீர்திருத்த நாடகங்களை நான் இதுவரை பார்த்ததில்லை. நாடகத்தைப் பார்த்து மிக மன மகிழ்வு கொண்டேன். நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதான கருத்துக்களைக் கொண்ட நல்ல நாடகங்கள்தாம் நாட்டிற்கு தேவையானது. காலச்சக்கரம் அதிவேகமாக சுழன்று வருகிறது. சமூகத்திலுள்ள பல தீய பழக்கங்களை ஒழித்து மக்கள் சமுதாயத்திற்கு சீர்திருத்தம் செய்யும் நாடகங்கள் நாட்டிற்குத் தேவை. அதை நடித்து நடத்தும் ராதா அவர்களை நான் பாராட்டி மகிழ்வதுபோல நீங்களும் சந்தோஷப்படுவீர்களென்றுதான் எதிர்பார்க்கிறேன். ஆகவே நமது ஊருக்கு வந்திருக்கும் சீர்திருத்த நடிகமன்றத்தாரை நாம் ஊக்கமளித்து அவர்களைக் கௌரவப்படுத்த வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என் தலைமையுரையை முடிக்கிறேன். என்னைத் தலைமை தாங்குமாறு வேண்டிய ராதா அவர்களுக்கு என் நன்றி! எல்லோருக்கும் வணக்கம்!!

விமர்சனம்.

நடிகர்கள் :

M. R. ராதா
P. A. பிரேமாவதி
P. A. தட்சிணமூர்த்தி
K. K. சத்தியமூர்த்தி
மனேகரன்
ராமனுதன்

★

திரு M. R. ராதா அவர்களின் நாடகத்தைப்பற்றி பல ஆண்டுகளாகக் கேள்விப்பட்டதுண்டு. ஆனல் பார்த்ததேயில்லை. கண்ட பின்னர்தான் ராதாவின் நடிப்பையும் அவர் சீர்திருத்தக் கதைகளையும் எவரும் பாராட்டாமலிருக்கமுடியாது என்ற துணிவு நமக்குப் பிறந்தது. அவர் வழக்கம்போல் நடிப்புக்கலையின் சிகரத்திலேதான் தவழ்கிருர் என்று கூறுவது மிகையாகாது.

தோழியர் பிரேமாவதியின் நடிப்பும் பாட்டும் போற்றற்குரியதே. மற்ற நடிகர்களின் நடிப்பும் பாட்டும் பரவாயில்லை.

நாடகத்தில் குறிப்பிடத்தக்கவை:- விதவைகளைப்பற்றிப் பேசும் உருக்கமான கட்டமும், சினிமாத் தொழிலிலுள்ள ஊழல்களை நகைச் சுவையுடன் பெண்வேடந்தாங்கி ராதா அவர்கள் நடித்துக் காட்டும் பகுதியும், வடநாட்டுக்காரர்களின் சுரண்டல் நோக்கங்களையும், அதிகாரி களின் பிற்போக்கான மனப்பான்மையை விளக்கும்கட்டமும் சீர்திருத்த வாதி அடையும் பழியும் எவர் நெஞ்சையும் நெகிழச் செய்யும் இயல் புடையனவாகும்.

கோவை மக்கள் இந் நாடகத்தை வெகுவாக ஆதரித்து ராதா அவர்களை ஊக்குவித்து நல்ல சீர்திருத்த நாடகங்களை கோவையிலேயே நடிக்க சந்தர்ப்பமளிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

குறிப்பு:— கோவை சாரதாஹால் நிர்வாகி திருவாளர் சி. பி. கருப்பண்ண பிள்ளை அவர்கள் இதுபோன்ற சீர்திருத்த நாடகங்களுக்கு ஆதரவளித்து நடத்த முன்வந்திருப்பது போற்றற்பாலதே. கோவை மக்கள் சார்பாக, நமது நன்றி உரித்தாகுக. புராண நாடகங்களை நடத்தி மக்களை மூட மதியினராக்காது, இதுபோன்ற இன்னும் பல சீர் திருத்த கருத்துக்கொண்ட நாடகங்கள் நடத்த அதிக ஆதரவு தர வேண்டுகிறோம்.

— ஆசிரியர்.

★

தீபாவளி ஸ்பெஷல் தித்திப்பு
உண்டு ஆனந்திக்க சிறந்த இடம்

சிட்டி சென்ட்ரல்
பிருமணாள் காபி கிளப்
ராஜவீதி : : கோவை

சீமான்கள் விரும்பும் சிறந்த சிற்றுண்டிகள்
நேர்த்தியான முறையில் தயாரிக்கிறோம்.

அன்பர்கள் ஆதரவை எதிர்பார்க்கும்
ஸ்வீட் G. N. நாணுவையர்.
தயாரிப்பவர் & மானேஜர்.

கோவைச் செய்திகள் :: ::

சூலூர் கண்காட்சியும்-போட்டிப் பந்தயமும்.

மதுவிலக்குத் திட்டத்தின் கீழ் இப்பொழுது கிராம விளையாட்டுகளும் நிர்மாண வேலைகளும் கிராம சங்கங்களின்மூலம் நடைபெற்று வருவது பொதுமக்கள் அறிந்தவிஷயம்.

இத்திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் 29, 30 தேதிகளில் சூலூர் போர்டு ஹைஸ்கூலில் விவசாய கால்நடை கைத்தொழிற் கண்காட்சிகள் வெகு விமரிசையாக கோவை ஜில்லா கலெக்டர் F.W.A. மாரிஸ் E.S Q.I.C.S. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக் கண்காட்சியைக்காண பல்லடம் தாலூக்காவிலுள்ள பல கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் திரண்டு குழுமியிருந்தனர். கண்காட்சி சாலையில் பலவகையான காளைகள், கோழிகள், விவசாயக்கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. விதவிதமான புல், காய்கறி வகையருக்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. சிறுவர்கள் விளையாட்டுப்போட்டியிலீடுபட்டனர்.

தலைமைவகித்த கலெக்டர் அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம்:—

கிராமப் புனருத்தாரணமே நாட்டின் செல்வப் பெருக்கிற்கு மிக முக்கியமானது. கிராம மக்கள் தாங்களாகவே முன்வந்து விவசாயப் பெருக்கத்திலும், கால்நடைகளைக் கண்காணிப்பதிலும், உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிரிடலிலும் ஈடுபடவேண்டும். கிராமப் பெண்கள் குடிசைத் தொழிலில் கவனம் செலுத்தி கூடியவரையில் தத்தம் சுயதேவையையாவது பூர்த்திசெய்துகொள்ளப் பழகவேண்டும்.

அன்று மாலை விளையாட்டுப் போட்டிக்குத் தலைமைவகித்த திருமதி. மோரீஸ் அவர்கள் "சிறுவர்களும், சிறுமிகளும் எதிர்காலப் பிரஜைகளாவார்கள். அவர்கள் திடகாத்திரமும், நல்லறிவும் உடையவர்களாக இருந்தால்தான் நாட்டின் எதிர்கால வாழ்வு சுமூகமாக சுபீக்ஷமாக இருக்கு"மெனக்கூறி, போட்டிப் பந்தயத்தில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமிகளுக்கும் கண்காட்சியில் திறமைவாய்ந்த பொருள்களை செய்து அளித்தவர்களுக்கும் சுமார் 800 ரூ. மதிப்புள்ள வெள்ளிக் கோப்பைகளைப் பரிசாக வழங்கினார்கள். முடிவில் ஆபீசர், (R. D. O.) பொள்ளாச்சி ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரும், தாலூகா முன்னேற்றக் கமிட்டித் தலைவருமான M. C. கோவிந்தனவர்களால் வந்தனம் கூறப்பட்டு விழா இனிது முடிந்தது.

சூலூர் பெரியார் மைதானத்தில் 25—9—48 சனிக்கிழமை மாலை 5-மணிக்கு திராவிடத் தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் 70-வது ஆண்டு பிறந்ததினக் கொண்டாட்டம் S. K. கருப்பண்ணன்

(திராவிடக் கழக உபதலைவர் சூலூர்) அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. விழாவில் திருவாளர்கள் கோவை முரசு ஆசிரியர், S. A. மாணிக்கம், ஈரோடு சண்முகவேலாயுதம், S. N. அற்புதசாமி, திரு. புலவர் குழந்தை (ஆசிரியர் இராவண காவியம்) ஆகியோர் சொற்பெருக்காற்றினர். அன்று மாலை பெரியார் படத்தை நன்கு அலங்கரித்து கருஞ்சட்டைப் படையினர் ஊர்வலம் வந்தனர்.

கோவை ஜில்லா மோட்டார் தொழிலாளர் மாநாடு U. M. S. சென்ட்ரல் ஸ்டேஷனில் 18—9—48ல் வெகு சிறப்பாக நடந்தது. கொடியேற்றுவிழா திரு. M. சுப்பையா கவுண்டராலும், வரவேற்புரை கிருஷ்ணமூர்த்தியாலும், திறப்புவிழா கனம் நிதி மந்திரி, கோபால் ரெட்டியாலும், தலைமையுரை சீத்தாராம் நாயுடுவாலும், காந்திஜீ, ஜவஹர், என். ஜி. இராமசாமி முதலியோர்களின் படத் திறப்புவிழாக்கள் முறையே சங்கர்ஜி, திருவேங்கடம், சண்முகத் தேவர் அவர்களால் ஆற்றப்பட்டு மாலை 2-30 மணிக்கு தொழிலாளர் நலனுக்காக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மாலை 5-30 மணிக்கு வந்தனோபசார விழாவோடு மாநாடு முடிவடைந்தது. திருவாளர்கள் G. D. நாயுடு, S. A. மாணிக்கம் முதலியோர்கள் சொற்பெருக்காற்றினார்கள்.

மாகாண திராவிடர் கழக தனி மாநாடு.

ஈரோட்டில் 23, 24-10-48 ஆகிய இரு தேதிகளிலும் நடைபெற்றது. சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் குழுமியிருந்தனர். 23-10-48தேதி காலை ஈரோடு முசாபரி பங்களாவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாநாட்டுப் பந்தல் வந்தடைந்தது. தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் கொடியேற்று விழா நடத்தினர். அறிஞர் S. குருசாமி B. A. மாநாடு திறப்புவிழா சொற்பொழிவு நிகழ்த்தினர். மாநாட்டுத் தலைவர் தளபதி C. N. அண்ணாத்துரை M. A. அவர்கள் தலைமை முன் உரையை நிகழ்த்தினர்.

நகைச்சுவையரசு N. S. கிருஷ்ணன் காந்தியார் படத்திறப்புவிழா நிகழ்த்தினர்.

24-10-48 தேதி காலை மீண்டும் மாநாடு ஆரம்பமாயிற்று. தோழர் N. V. நடராஜன் (சிங்காரவேலர் படத்தையும்), தோழர் T.P. வேதாசலம் (சர். P. T. தியாகராயர் படத்தையும்), தோழர் K. V. அழகிரிசாமி (நாகம்மையார் படத்தையும்), தோழர் A. V. P. ஆசைத்தம்பி (தாலமுத்து-நடராஜன் படத்தையும்), தோழர் A. சித்தையன் (சர். A. T. பன்னீர்செல்வம் படத்தையும்) தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் (திராவிட நாட்டுப் படத்தையும்), இரா. நெடுஞ்செழியன் M.A. (மனோன்மணீயம் படத்தையும்), தோழர் C.D.T. அரசு (N. அர்ச்சுனன் படத்தையும்) திறந்துவைத்து முறையே சொற்பெருக்கு நிகழ்த்தினர்கள். தலைவர் முடிவுரை கூறினர். E. V. K. சம்பத் வந்தனம்கூற மாநாடு இனிது கலைவுற்றது.

(இருநாள் இரவும் நாடகம் நடைபெற்றது.)

படக் கலைப் பகுதி.

மோகினி

விமர்சனம்.

வெளியிட்டவர் :	ஜூபிடர் பிக்சர்ஸ்.
திரைக் கதை :	A. S. A. சாமி B. A. (Hons)
வசனம் :	S. D. சுந்தரம்
பாடல்கள் :	சுந்தர வாத்தியார் பூமிபாலகதாஸ்
டைரக்ஷன் :	லங்காசத்யம்
தயாரிப்பு :	M. சோமசுந்தரம்

நடிகர்கள் :

T. S. பாலையா, M. G. ராமச்சந்திரன், R. பால சுப்ரமண்யம், புளிமூட்டை ராமசாமி, M. N. நம்பியார், V. N. ஜானகி, மாதுரிதேவி, M. S. S. பாக்கியம் மற்றும் பலர்.

நட்னம் :

லலிதா & பத்மினி

"மோகினி" திரையுலகத்திற் கேற்றாற்போல நல்ல முறையில் எழு தப்பட்டுள்ளதைக்குறித்து வரவேற் கப்பாலதே.

குதிரைமீதுஅமர்ந்து காட்சியளிக் கும் கட்டத்திலிருந்து காட்சி ஆரம்ப மாகிறது.

கதையில் எல்லாப் பகுதியும் மிக நல்ல முறையிலேயே அமையப்பெற் றுள்ளது. ஆனால் சிற்சில இடங்க ளில் அவசியமற்று நீளப்பட்டுள் ளது.

திரு. T. S. பாலையாவின் நடிப்பும் பேச்சும் படத்தை சோபிக்கச் செய் கிறது. மோகினியாக நடிக்கும் தோழியர் V. N. ஜானகி, குமாரி யாக நடிக்கும் மாதுரிதேவி ஆகி யோர் மிக திறமையாக நடித்துள் ளார்கள். மற்ற நடிகர்களும் தங்கள் திறமைக்கேற்றவாறு நடித்துள் ளார்கள்.

ஜெய்சிங் அரசன் தர்பார் அவ்வ ளவு நீண்ட பகுதி அவசியமில்லை.

படம் பார்க்கும் ரசிகர்கள் உள் ளத்தை "சப்பென" ஆக்குவதற்கு அதுவே காரணமாகும்.

பேயாட்டம் அவசியமற்றது, அநாகரீக முறையில் சேர்க்கப்பட் டுள்ளது.

பறக்கும் குதிரையின் காட்சியும், கற்சிலையாக இருந்து பின் நடனப் பெண்ணாக மாறும் தோற்றமும் அடிக்கடி பல உடைகளில் மாறி நடிக்கும் லலிதா-பத்மினி நடனமும் படத்திற்கு முழு வெற்றியளிக்கிறது என துணிந்து கூறலாம்.

— தோழன்.

ஊதியமுள்ள அனுகூலமான
பிரதிநிதித்துவத்திற்கும் குடும்ப பாதுகாப்பிற்கும்

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிட்.,

தலைமை ஆபீஸ்:- கோயமுத்தூர்.

தமிழ் நாட்டில் சென்ற 13 வருடங்களாக
திறமையுடன் சேவை செய்துவரும்
ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்.

(o)

31-12-45 முடிய கணிதப் பரிசோதனையில் போனஸ் பிரிவினை.

ஜீவிய பாலிசிக்கு	:	ரூ. 40-0-0
எண்டௌமெண்டு பாலிசிக்கு	:	ரூ. 30-0-0

விபரங்களுக்கு தலைமை ஆபீசுக்கு எழுதவும்.

V. C. வெள்ளிங்கிரி கவுண்டர், M.L.A.,
தலைவர்.

M. S. பழனியப்ப முதலியார், B. A.,
மானேஜிங் டைரக்டர்.

C. R. சிவசுப்ரமணியம், B. A.,
செக்ரெடரி.

பீடிகளின் கோமான் கோபால் மார்க்கென கூவுகுயிலே!

குணம்! மணம்!! காரம்!!!
இவற்றில் தன்னேரற்றது!!!!

உரிமையாளர் :-

A. K.
அப்துல் அஜீஸ்,

கோபால் மார்க் பீடி பேக்டரி,

மங்கலம் ரோடு, பல்லடம்.

ஏஜண்டுகள் :—

ஜனுப் K. தஸ்தகீர் சாயபு, தாராபுரம்.
ஜனுப் K. முஹமத்சா சாயபு, காங்கயம்.
ஜனுப் P. N. பீர் முஹமத் சாயபு, பழனி.

உண்மை!
நம்பிக்கை!!
நாணயம்!!!

இவைகளுக்கு ஏற்ற இடம்

கிருஷ்ண கிளாத் ஷாப்,

பெரியகடைவீதி,
கோயமுத்தூர்.

உரிமையாளர்கள் :

K. கிருஷ்ணசாமி, V. M. கிருஷ்ணசாமி.

தென்னிந்தியாவில் புகழ் பெற்ற

பல்லடம் குயில் மார்க் பீடிகள்

உபயோகத்திற்கு உகந்தது

குணத்தில் சிறந்தது குயில் மார்க்கென கூவு குயிலே

குயில் மார்க் P.A.R.

ரிஜிஸ்டர் நெ. 1178.

பல்லடம். பீடிகள்.

TRADE MARK.

P.A. ரஹீம் சாயபு.

குணத்திலும் மணத்திலும் சுவையிலும் சிறந்தது.

Pro:- P. A. ரஹீம் சாயபு, பல்லடம்.

ஏஜண்டு:- K. அய்யாசாமி செட்டியார், திருப்பூர்.
அமீர் சாயபு, உடுமலைப்பேட்டை. K. மம்முசா சாயபு, காங்கயம்.
S. நடராஜ முதலியார், அவினாசி.

The Mysore Briyani & Meals Hotel.

Supplied me and my party Meals during my visit to Coimbatore on the 5th of April. I am happy to say that the food was clean, wholesome & tastly & the service courteous & pleasant.

(Sd.) **Jayaprakash Narayan,**
5—4—48.

மைசூர் பிரியாணி & சாப்பாடு ஓட்டல்,

பெரியகடை வீதி, கோவை.

அகில இந்திய சோஷியலிஸ்ட் தலைவர் ஸ்ரீஜத் ஜெயப்பிரகாஷ் நாராயணனால் போற்றிப் புகழப்பட்ட ஒப்பற்ற உணவு விடுதி.

நாவிற்கு ருசி ! நல்ல மணமுள்ள பதார்த்தம் !!

சுகாதார முறைப்படி தேன் சுவைதரும் உணவுகள்.

இவற்றிற்குப் புகழ்வாய்ந்த இணையிலா உணவு விடுதி.

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்.

உரிமையாளர்கள் :— R. N. G. & G. P. R.

-: புது ரக ஜவுளிகள் :-

விலை மிகவும் நயம்

புது வரத்து நாணயமான சரக்கு

பெங்களூர், காஞ்சீவரம், சேலம், கொரனுடு
பட்டு சேலைகளும்,

பெங்கால் சில்க் சேலைகளும்
(யாவும் நூதன பார்டர்களும் பேன்சிகளுடன் உள்ளது)

உள்ளூர், சேலம், உறையூர், மதுரை
60, 80 & 100 நெ. நயமான சேலைகள்
சேலம் & மதுரை வெண்பட்டு & நூல்
வேஷ்டிகளும், துப்பட்டாக்களும்
அங்கவஸ்திரங்களும்

ஆடவருக்கும், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற பலவிதமான உடுப்பு தினுசுகளும், பாவாடை & சித்தாடைகள், கோட்டிங், ஷர்ட்டிங், பனியன் மற்ற பெட்ஷீட்டு, கர்டன் துணிகள், மெத்தை, தலையணை Etc., Etc.

ஒரு தடவை விஜயம் செய்க.

S. பீமைய செட்டி,

"ஒயிட் ஷாப்" :: கோயமுத்தூர்.

நம்பிக்கை! நாணயம்!! நீடித்த உழைப்பு!!!

உறுதியோடும் நாகரீக வேலைப்பாடுமமைந்த
பித்தளை பாத்திரங்களுக்கு
தென்னாட்டிலே தலைசிறந்த இடம்

K. இராமச்சந்திரன்,

பாத்திரக் கடை,

பெரிய கடை வீதி, :: கோயமுத்தூர்.

திரிபுர சுந்தரி விலாஸ்

காபி கிளப்

கோயமுத்தூர்

(U. M. S. பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்)

★ சுவைமிக்க
ஆனாலும் நறுமணங் குன்றாத

★ கவின்மிக்க
தின்றாலும் தெவிட்டளிக்காத

★ ருசிமிக்க
அன்றாடம் புத்தின வெண்ணையுருக்கிய
நெய்யில் செய்யப்பட்ட காரம், இனிப்பு முதலிய
அறுசுவை பண்டங்கள் யாவும் இணையில்லாதவை.
ஸ்பெஷல் ஆர்டர்களை சீரிய முறையில் செவ்வனே
உடனடியாக கவனிக்கப்படும்.

Pro:- P. S. வெங்கடேஸ்வரன்.

போன் : 272. தந்தி : ராயல்.

RHR

ராயல் ஹிந்து ரெஸ்டாரெண்ட்,

போர்டிங் & லாட்ஜிங்,

(ரயில்வே ஸ்டேஷனுக்கு சமீபம்)

இம்பீரியல் பாங்க் வீதி, கோயமுத்தூர்.

நவீன விஞ்ஞான சுகாதார முறையோடு கூடிய
24 ரூம்கள் உள்ளன.

வெளியூர் அன்பர்களுக்கு தங்க, குளிக்க, நல்லுணவுபெற
எல்லாவற்றிற்கும் சிறந்த உணவு விடுதி இது ஒன்றே.

தமிழர் நலனுக்காக தமிழரால் நடத்தப்படும் இவ்வுணவு
மகாலுக்கு விஜயம்செய்து ஆனந்தமடைக.

Pro:- M. A. குருசாமி.

பெங்களூர் பிரியாணி ஹோட்டல்

(டவர் கிளாக்குக்கு எதிரில்)

கோயமுத்தூர்.

கோவையிலே ஈடுயெடுப்பற்ற பிரியாணி ஹோட்டல்
இது ஒன்றே.

ஆரம்ப நாளிலிருந்து இந்நாள்வரை அப்பழுக்கின்றி சுகாதார முறையோடு சுவை குன்றாத வகையோடு தயாரிக்கும் உணவு வகைகளுக்கு ஒப்பற்ற விடுதி இது ஒன்றேதான்.

Pro:- K. S. M. G. சாமி

ராஜ வீதி, கோவை.

RAJU FOOT WEAR

BIG BAZAAR ST., COIMBATORE.

நம்பிக்கை ! நாணயம் !!

PILOT

TRADE MARK

மிதியடிகள்

கான்பூர் சூஸ் வகையருக்கள்

நவீனம், அழகு, உறுதி, சரசம் பொருந்தியது

ஒருமுறை வாங்கி உபயோகிக்கவும்.

சாரதா விலாஸ் காப்பி ஓட்டல்,

— சூலூர். —

நாவிற்கு ருசியும், மனதிற்கு திருப்தியும் அளிக்கவல்ல, தித்திப்பு, காரம் போன்ற எல்லாவிதமான பலகாரங்களும் நெய்யினுல் தயார் செய்கிறோம்.

சுத்தமாகவும், சுவை மிகுந்தவையாயும் தயாரிக்கிறோம்.

டீ பார்ட்டி போன்ற பெரிய ஆர்டர்களை குறிப்பிட்ட காலத்தில் செய்துகொடுப்போம்.

உரிமையாளர் : V. ரத்தினம் ஐயர்.

கல்யாண காலத்திற்கும், பொதுக்கூட்டங்களுக்கும் பெட்ரோமேக்ஸ் லைட் வாடகைக்கு விடப்படும்.

எல்லாவிதமான லைட் ரிப்பேர்களும் செய்து கொடுக்கப்படும்.

டிரைவர். K. கந்தசாமி,
பெட்டி ஷாப்,
மார்க்கெட் ரோடு, சூலூர்.

வெல்கம் பிரியாணி ஓட்டல்,

கடைவீதி, — சூலூர்.

காலை, மாலை சிற்றுண்டியும், சத்துள்ள சாப்பாடும், நறுமணம் கமழும் பிரியாணியும், சுவைதரும் உணவும், சுத்தமான பதார்த்தங்களும் சிறந்த முறையில் தயாரிக்கப் படுகின்றன. எப்போதும் கிடைக்கும்

Prop: P. S. சுப்பைய செட்டியார்.

விற்பனை.

எங்களிடம் இப்பொழுது நன்னிலையில் ஓடிக்கொண்டிருக்கிற டெம்மி சைஸ் ஸிலிண்டர் மிஷின் ரூ. 6000-க்கு விற்பனைசெய்ய விருக்கிறோம். தங்கட்குத் தேவையாயின் நேரில் வருக.

ஸ்ரீ கதிரேசன் அச்சகம்,
இராச வீதி, கோயமுத்தூர்.

எமது நிகரற்ற உத்தரவாத நல்லெண்ணெய்

குணத்திலும், மணத்திலும் சிறந்தது.
உபயோகத்திற்கு உகந்தது. காரல் அற்றது.
30 ஆண்டுகளாக புகழ்பெற்றது. பல நற்சாட்சியும்,
நன்மதிப்பும் வாய்ந்தது.
ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

A. P. ராமசாமி செட்டியார்,
உத்திரவாத நல்லெண்ணெய் ஸ்டோர்ஸ்,
புதுமார்க்கெட், :: கோயமுத்தூர்.
நிர்வாகி:- *R. L.* சுப்பிரமணிய செட்டியார்.

:-: லட்சுமி லாட்ஜ் :-:

மில்டேரி ஹோட்டல்
பழைய போஸ்டாபீஸ் ரோடு, கோயமுத்தூர்.

முத்துப்போன்ற வெண்சோறும்
முறுக்களிக்கும் பிரியாணியும்
சத்தளிக்கும் சாப்பீசும்
சந்துஷ்டிதரும் கறிவகைகளும்
நளபாகத்தில் செய்யப்பட்டவைகளாகும்,
அளவு சோறிடினும் ஆனந்தந்தரும் அருமையான
தமிழர் உணவு விடுதி.

Pro:- லட்சிமியம்மாள்.

வருந்துகிறேம்.

கொங்கு நாட்டு வேந்தர் திரு. V. C. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் எதிர்பாராவிதமாக 8—11—48 தேதி நம்மைவிட்டு மறைந்தார்.

விபரம் அடுத்த முரசில்.

Edited & Published by S P. Meenakshi Ammal, Sulur.
Printed by Sri. Kathiresan Press, Coimbatore.
Mg. Editor: S. A. Manickam.

ஆல் இந்தியா
ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :— பம்பாய்.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 31,25,000

உங்களுடைய மோட்டார், லாரி, பஸ்.
டாக்ஸி முதலியவைகளை
இன்ஷ்யூர் செய்வதற்குத் தகுந்த ஸ்தாபனம்
மற்றும் எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும்
செய்யப்படுகின்றன.

விவரங்களுக்கு எழுதவும் ;—

சென்னைக் கிளை நிலையம்:— 118, திருச்சி ரோடு, கோயமுத்தூர்

பிராஞ்சு மானேஜர்:- *P. V. K. ஷண்முகம்.*

சென்னை ஆபீஸ்:—

308, 309 லிங்க செட்டி தெரு, சென்னை.

KOVAI MURASU. Regd. No. M. 5064.

தந்தி: ராஜா.

சுவர்ண மாளிகை



போன்
268

தபால்பெட்டி
139.

பி.ஏ.ராஜூ செட்டியார் & பிரதர்
வைர வியாபாரிகள்
கோயமுத்தூர்

ஸ்ரீ கதிரேசன் அச்சகம், கோவை.